விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 02 வெள்ளிக்கிழமை (16.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 179


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# பயணிகள் பஸ் கிளைமோரில் சிக்கியது

# 64 பேர் உயிரிழப்பு; 84 பேர் படுகாயம்





## அநுராதபுரம் ஹெப்பிட்டிக்கொல்லாவவில் பயங்கரம்

(நமது நிருபர்)

அநுராதபுரம் ஹெப்பிட்டிக்கொல்லாவவில் நேற்றுக் காலை இடம் பெற்ற கிளைமோர்த்தாக்குதலில் பயணிகள் பஸ் ஒன்று சிக்கியது. அதில் பயணித்த *64* பயணிகள் பலியாகினர். மேலும் *84* பேர் படுகாயமடைந்தனர்.

பலியானவர்களில் *14* சிறுவர்கள், ஒரு பௌத்தபிக்கு மற்றும் பெண்கள் உட்பட *64* சிங்கள மக்கள் எனத்தெரிவிக்கப்பட்டது. சுமார் 150 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ்மீது இரண்டு கிளைமோர்க்குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெப்பிட்டிக்கொல்லாவ தாக்குதல் அரசு-விடுதலைப்புலிகள் கண்டனம்

(கொழும்பு)

ஹெப்பிட்டிக்கொல்லாவவில் பொதுமக்கள் பயணித்த பஸ்மீது கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமைக்கு விடுதலைப்புலிகளும் அரசும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் சார்பில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் அறிக்கை யொன்றை விடுத்துள்ளது.

வவுனியாவில் இருந்து 23 கிலோமீற்றர் தொலைவில் ஹெப்பிட்டிக்கொல்லாவவில் பொதுமக்கள் பயணித்த பேருந்து மீது கிளைமோர்த்தாக்குதல் நடத்தப்பட்டதில் 64 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்துள்ளனர். வடக்கு-கிழக்கில் பொதுமக்களின் வாழ்க்கையை அரசாங்கம் தொடர்ந்து சீர்குலைத்து வருகிறது. ஜெனீவாப் பேச்சுக்கள் நடைபெற்ற பெப்ரவரியில் இருந்து 24 குழந்தைகள் உட்பட 250 பேர் இதுவரை இராணுவத்தினரால் வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் திரும்பியுள்ள நேரத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதலானது தமிழீழ விடுதலைப்புலிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இராணுவம்மீது தாக்குதல் இருவர் பலி; மற்றொருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பணத்தில் நேற்று பரவலாக இராணுவத்தினர்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

இணுவில் கந்தசாமி கோயிலுக்கு முன்பாக கே.கே.எஸ்.வீதியில் ரோந்தில் ஈடுபட்ட இராணுத்தினர் மீது நேற்றுக் காலை 11 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே தாக்குதல் நடத்தியதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதனையடுத்து அப்பகுதியூடான பயணம் சில நிமிடநேரம் தடைப்பட்டது. வீதியில் சென்றோர் தீவிரமாக சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கு முன்பாக கடமையில் நின்ற படையினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றது. தாக்குதலை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

யாழ்.கச்சேரிப் பகுதியில் உள்ள இராணுவக்காவலரண்மீது நேற்று முன்தினமிரவு 7.30 மணிக்கு இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேநீர் அருந்துவதற்காகச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

### கன்னாதிட்டிச் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதிக்கு அண்மையில் கன்னாதிட்டிச் சந்தியில் வைத்து சிவில்உடையில் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் மாலை 5.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது. உதயன் பத்திரிகை நிறுவனத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குமாரசிறி திலக் (வயது 43) என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பாதுகாப்புக் கடமையிலிருந்த பிரஸ்தாப கான்ஸ்டபிள் தேநீர் அருந்துவதற்காக சிவில உடையில் ஆயுதம் எதுவுமின்றி கன்னாதிட்டிச் சந்தியிலுள்ள தேநீரகம் ஒன்றிற்குச் சென்றிருந்தபோது இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக யாழ். பொலிஸ்நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் சடலத்தை மரண விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்புமாறு உத்தரவிட்டதுடன் மரண விசாரணையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

# தமிழக உறவுகளின் உணர்வும், ஈடுபாடும், தமிழக இந்திய அரசுகளின் நிலைப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும்

## சு.ப.தமிழ்ச்செல்வன் நம்பிக்கை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது தமிழக உறவுகளின் உணர்வும் ஈடுபாடும் தமிழக மற்றும் இந்திய அரசுகளின் நிலைப்பாடுகளில் மாற்றத்தை உருவாக்கும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்



பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் ஒலி வானொலிக்கு கடந்த சனிக்கிழமை நோர்வேயிலிருந்து அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். எமது உறவுகளாகிய தமிழ்நாட்டு மக்கள், தமிழீழ மக்கள் தொடர்பாக தமிழீழ மக்களினது விடுதலைப் போராட்டம் தொடர்பாக முழு அளவிலும் ஆதரவுடன் தான் இருக்கின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தலைவர் மீதும் எமது போராட்டத்தின் மீதும் முழு நம்பிக்கையோடு உள்ளனர். தமிழகமக்களின் உணர்வும் ஈடுபாடும் நிச்சயமாக தமிழக அரசு மற்றும் இந்திய அரசு நிலைப்பாடுகளில் தமிழீழ மக்களுக்கான ஒரு ஆதரவான நிலையை ஒருநாள் கொண்டு வரும் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

எமது மக்கள் மீது கொடூரமாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனப்படுகொலைகள் மற்றும் கொடூரங்கள் பற்றி நன்கு அறிந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர். அவர்களுக்கு இடைக்காலத்தில் சில நெருக்குவாரங்கள் ஏற்பட்டிருந்தாலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் தமிழ் மக்கள் மீது சிங்கள இன வாதிகள் கட்டவிழ்ந்துவிட்டிருக்கிற வன்முறைகளையும் அறிந்து தமிழகத்தில் தங்களது எதிர்ப்புக்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான தார்மீக ஆதரவுகளையும் தமிழகத்தில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

தமிழக மக்களும், தமிழக அரசும் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான ஆதரவான நிலைப்பாட்டை மிகவிரைவில் நிச்சயம் ஒன்றுபட்டு வெளிப்படுத்துவார்கள் என்பதில் நம்பிக்கையுள்ளது. ஏனெனில் நீதியும் நியாயமும் எங்கள் பக்கம் இருக்கிறது. எங்கள் உறவுகள் உலகெங்கும் பரந்து வாழ்ந்தாலும் எங்கள் மக்கள் தாக்கப்படும் போது எங்கள் மக்கள் மீது கொடூரங்களை, அவலங்களைத் திணிக்கின்ற போது எங்கள் மக்களை நசுக்கு கின்ற போது பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

தமிழ் நாட்டிலும் எங்கள் தமிழ் மக்கள் நிச்சயமாக சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் கொடூரங்களுக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்துவார்கள்.

தமிழர்கள் மீதும் தமிழர் தாயகத்தின் மீதும் ஒரு கொடூரமான இன வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிற இலங்கை அரசாங்கத்தின் மீது இந்திய மத்திய அரசானது இராஜதந்திர அழுத்தங்கள் உட்பட பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தி இனவெறியையும் படுகொலைகளையும் கண்டிக்கும் நிலை உருவாக வேண்டும்.

தமிழகத்திலே வாழுகிற எமது உறவுகளின் ஒன்றுபட்ட உணர்வின் வெளிப்பாட்டில்தான் இந்திய மத்திய அரசு மட்டத்தில் இந்த மாற்றங்களும் வெளிப்பாடுகளும் வரும் என்று நினைக்கிறோம். சர்வதேச நாடுகளில் எம்மீது தடை விதிக்கிற இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் முட்டாள்தனமானவை. பாரிய எதிர்விளைவை உருவாக்கப்போகிறது.

சர்வதேசத்தின் பெருமளவிலான உதவிகளைப் பெற்றுக் கொண்டுதான் இலங்கை அரசாங்கமானது தமிழர்களை இனப்படுகொலை செய்தது. ஆனால் எமது தலைவரும் மக்களும் இராணுவ ரீதியாக வலுப்பெற்று இலங்கை அரசாங்கத்தை முடக்கும் வகையிலான வலிமையை பெற்றனர். அனைத்து வகையிலும் படுதோல்வியடைந்த நிலையில் தான் சர்வதேசத்தின் காலடியில் விழுந்து இலங்கை அரசாங்கம் பேச்சுக்களுக்கு வந்தது.

இனப்படுகொலைகளை மேற்கொள்வதற்காகத்தான் தமிழீழ விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துகிற இத்தடை முயற்சிகளாகும். சிங்கள அரச பயங்கரவாதத்தை முறியடிப்பதைத் தவிர எங்களுக்கு மாற்று வழியேதும் இல்லை. எங்கள் மக்களும் முழு அளவில் எழுச்சியுடன் உள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தை திருப்திப்படுத்தும் சர்வதேச சமூகத்தின் போக்கும் ஒட்டுமொத்த தமிழ் மக்களை தமது பலத்தில், தமது சுயத்தில், தமது வழியில் நின்று தற்காத்துக்கொள்கிற தீர்மானங்களை எடுக்கிற நிலைக்குத் தள்ளியிருக்கிறது என்றார். (கு)


## சிறு விளம்பரம்

### வாடகைக்கு உண்டு

கடை வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்க. பிள்ளையார் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். T.P.2227543. (C/34)


## சமாதானப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம் சாயி நிலையத்தினர் மக்களின் மன அமைதிக்கும் சமாதானத்திற்குமான பிரார்த்தனையை நாளை சனிக்கிழமை பி.ப. 3.30மணி முதல் இராமநாதன் வீதியிலுள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடத்தவுள்ளனர்.

எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே சிந்தனையில் செய்யும் பிரார்த்தனைக்கு அதி கூடிய சக்தி உண்டு என்பதால் அனைவரையும் மக்களின் மன அமைதிக்கும் சமாதானத்திற்குமான பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு சாயி நிலையத்தினர் கேட்டுள்ளனர். (க-7)

## விண்ணப்பம்கோரல்

மத்திய மாகாண சபையின் மொழி பெயர்ப்பாளர் சேவை யின் (சிங்களம்/ ஆங்கிலம்) உள்ள வெற்றிடத்திற்கு தற்போது அரச சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இவ் வெற்றிடப் பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு விரும்பும் உத்தியோகத்தர்கள் தமது முழு விபரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை தமது தாபன முதல்வரின் சிபாரிசுடன் இம்மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு செயலாளர் மத்திய மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு, த.பெ.இல.114 கட்டுகஸ் தொட்ட வழி, கண்டி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். (க-7)

## இராசி பலன்

**16.06.2006**
**(ஆனி 2, வெள்ளிக்கிழமை)**
**பஞ்சமி பிற்பகல் 3.40 மணிவரை**
**அவிட்டம் பின்னிரவு 1.05 மணிவரை**
**இராகுகாலம் 10.23-11.53மணிவரை**
**சுபநேரம் 5.53-7.23 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், சயனசுகம். |
| இடபம் | பிரபுத்தனம், எடுத்த காரியம் கைகூடும், நன்கொடை, ஆரோக்கியம். |
| மிதுனம் | புத்திரரால் கவலை, பொருள் விரயம், கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கடகம் | மனக்கவலை, அஜீரணம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல். |
| சிங்கம் | மனோதைரியம், சயனசுகம், அபூர்வ சந்திப்பு, தெய்வதரிசனம். |
| கன்னி | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம். |
| துலாம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக்குவை, தொழில் சிந்தை. |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், தனவிரயம், தன்னம்பிக்கைக் குறைவு, ரோகநிலை. |
| தனுசு | நற்கீர்த்தி, காரிய நன்மை, தெய்வ தரிசனம், குடும்ப சுகம். |
| மகரம் | அதிக செலவு, மனோ சங்கடம் போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| கும்பம் | வெகுமானம், மாதர் நட்பு, மனமகிழ்ச்ச, சயன சுகம். |
| மீனம் | சேம்பல் நிலை, காரிய தடங்கல், சிந்தனை மிகுதி, 'பிறர் உதவி. |

- வளவன்

## கடற் கொந்தளிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகக் கடல் பகுதியில் கடந்த 9ஆம் திகதி தொடக்கம் கடல் கொந்தளிப்பு மற்றும் கடுங் காற்று காரணமாக கடற்றொழிலாளர் தொழிலுக்கு செல்ல வில்லை எனக் கூறப்படுகிறது.

இதேவேளை சிலர் கடல் கோட்டைப் பகுதியிலும் புனித அந்தோனியார் ஆலயப் பகுதியிலும் வீச்சு வலை மூலம் குறைந்தளவில் மீன்களைப் பிடித்து வருவதாகவும் இதனால் மீனுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (72)

## அமைதிப் பேச்சுகளில் இருந்து அரசு விலகிக்கொள்ள வேண்டும்

### ஜே.வி.பி.வலியுறுத்து

இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதிப் பேச்சுக்களிலிருந்து அரசாங்கம் விலகிக்கொள்ள வேண்டும் என்று ஜே.வி.பி.வலியுறுத்தியுள்ளது. ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜே.வி.பி.யின் மத்திய குழு இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஏகாதிபத்திய நோர்வேயின் அனுசரணையால் தனிநாடு கோரும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண முடியாது. இருந்த போதும் நோர்வேஜியர்கள் முழுமைக்கும் ஏகாதி பத்தியவாதிகள் என்று நாம் கருதவில்லை. ஜனாதிபதி மற்றும் அரசாங்கமும் ஒற்றையாட்சிக் கோட்பாடு இலங்கையில் இறைமை பிரதேச ஒற்றுமையை காப்பாற்ற வேண்டும்.

ஜனாதிபதிக்கு நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் எழுப்பியுள்ள 5 கேள்விகளானது நோர்வேயின் காலனி நாடாக இலங்கையை பார்ப்பதாகவே கருதுகிறோம். இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை நாம் அறிய விரும் புகிறோம். ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்டிருக்கும் அறிக்கை மூலம் அவர்களது நோக்கம் தெளிவாகியுள்ளது.

இலங்கை அரசாங்கமானது 25ஆவது தோல்வியடைந்த நாடு என்றும் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வை அரசாங்கத்தால் காணமுடியாது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. இதையே நோர்வேத் தரப்பினரும் கூறுகின்றனர் என்று ஜே.வி.பியின் மத்திய குழு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நோர்வேயை எதிரி நாடாக அறிவிக்க வேண்டும் என்றும் ஜே.வி.பி.ஆதரவு அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. (கு)

## குடிநீர் போத்தல்களை விற்போரின் கவனத்துக்கு

(சுதுமலை)

வர்த்தகநிலையங்களில் விற்கப்படும் தொற்று நீக்கம் செய்யப்பட்ட குடிநீர் போத்தல்கள் சுகாதாரப் போசாக்கு நலன்புரி அமைச்சில் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் பெறப்பட்டவையாக இருக்க வேண்டும். இவ்வாறு யாழ். சுகாதார சேவைப் பணிப்பாளர் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது, பலதரப்பட்ட பெயர்களில் பல்வேறு வகை தொற்று நீக்கம் செய்யப்பட்ட குடிநீர் போத்தல்கள் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சில தயாரிப்புகளில் சுத்தமான குடி நீர் என உறுதிப்படுத்த எதுவித ஆதாரமும் இல்லாது உள்ளது. எனவே சுகாதார அமைச்சில் பதிவுசெய்து பதிவு இலக்கம் உள்ள போத்தல்கள் தான் இனி வரும் காலங்களில் விற்பனை செய்யப்பட வேண்டும்.

அத்துடன் அங்கீகாரம் பெற்ற தொழிற்சாலையின் அனுமதி குறித்த நிழற்பிரதி விற்பனை நிலையத்தில் வைத்திருக்க வேண்டும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பரிசோதனை செய்யும்போது உரிய அனுமதி பெறப்பட்டதாஎன்பதை பரிசோதிப்பார்கள். (க-252)


## 21 ஆண்டு கால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

**கலாலயா**
பயிற்சியகம்
மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
பெருமாள் கோயிலுக்கு அண்மையில்

மகளிருக்கான
துரித 1 மாத/3மாத பயிற்சிகள்

★ கேக் ஐஸிங்: 25 வகையான கேக் வடிவங்களின் மேல் சகல விதமான ஐஸிங் முறைகளும் செய்தல் மாச் சீனி மலர்கள் (SUGAR FLOWERS) செய்தல்
★ கூந்தல் அலங்காரம் : 30 வகையான கொண்டைகள் போடுதல்
★ உணவுதயாரித்தல் : மேலைத்தேச, கீழைத்தேச மற்றும் சீன உணவுகள் சிற்றுண்டிகள் தயாரித்தல்
★ (FABRIC PAINTING) ★ மலர் மலர்ச்செண்டுகள்செய்தல் ★ கைவேலை
★ அடிப்படை(FACIAL) அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரங்களும்
★ அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான 3 விதமாக சாறிபிளவுஸ் (SAREE BLOUSE) வெட்டித்தைக்கும் முறை
இத்துடன் புதிதாக தையல் பழக விரும்புவோருக்கான
★ 6 மாத உடை தயாரித்தல் பயிற்சியும் ஆரம்பமாகின்றன.

*கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 21-06-2006*
*சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 24-06-2006*

☛ மேலும் விபரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப.2.30 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

-பதிவாளர்

(C/342)

# முல்லைத்தீவு, கிளிநொச்சி மக்களும் சமுர்த்தி நிவாரணத்தை பெறுவார்கள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு சமுர்த்தி நிவாரணத்துக்கான கூப்பன்களை வழங்க சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சு துரித நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.கே.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த மக்களுக்கு வருட இறுதிக்குள் சமுர்த்தி கொடுப்பனவுக்கான கூப்பன்கள் வழங்கப்படுவதுடன் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் சகல திட்டங்களும் அமுல்படுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு இதுவரை எவ்வித சமுர்த்தி கொடுப்பனவுகளும் கிடைக்கப்பெறவில்லை.

எந்தவொரு அரசாங்கமும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வராத நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 'மஹிந்தவின் சிந்தனை' மூலம் இதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் வவுனியா மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கும் சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்திட்டங்களை கூடிய விரைவில் அமுல்படுத்துவதற்குத் தேவையான சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அதிகாரிகளைத் தெரிவு செய்யும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் பணிப்புரையின் பேரில் சமுர்த்தி முகாமையாளர்களாக கிளிநொச்சியில் 27பேரும், முல்லைத்தீவில் 32 பேரும், மன்னாரில் 37 பேரும் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அண்மையில் நடைபெற்றன.

இதேவேளை மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்து 648 சமுர்த்தி அதிகாரி களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

சமுர்த்தி முகாமையாளர்களைத் தெரிவு செய்வதற்காக அண்மையில் நடத்தி முடிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டோருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் கூடிய விரைவில் நடத்தப்படும்.

அத்துடன் சமுர்த்தி கொடுப்பனவு களுக்கு அப்பகுதிகளில் பாரிய வரவேற்பு உள்ளதென்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (க-9)

## இந்தோனேஷியக் கப்பல் திடீரென தீப்பிடித்தது

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இந்தோனேஷிய மீன்பிடி படகு ஒன்று நேற்று புதன்கிழமை தீப்பிடித்தது.

கொழும்பு மோதர மீன்பிடி துறைமுகத்தில் 'WEILAI-LANKA' என்ற இந்தோனேஷிய மீனவர்களின் இழுவைப்படகு நிறுத்தப்பட்டிருந்தது. அப்படகில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில் திடீரென தீப்பிடித்தது.

அதிலிருந்த 16பேரும் காயம் எதுவுமின்றி காப்பாற்றப்பட்டனர். இதையடுத்து துறைமுகத்திலிருந்து உடனே அப்படகு அகற்றப்பட்டது. இச்சம்பவத்தின்போது மோதர மீன்பிடி துறைமுகத்தில் 25 இழுவைப் படகுகள் நிறுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# அளவைக் கருவிகளை சோதனை செய்யும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள வியாபார நிலையங்களில் உபயோகிக்கப்படும் தராசுகள், அளவைக் கருவிகள் என்பனவற்றின் தரத்தை சோதனை செய்யும் நடவடிக்கைகள் அளவைகள் மற்றும் தராக் கட்டுப்பாட்டு திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

தனியார் வர்த்தக நிலையங்களில் வருடாவருடம் அளவைகளையும் தராசுகளையும் சோதனையிட்டு பரிசோதகர்கள் முத்திரையிடுவது அவர்களது கடமையாகுமென்று தெரிவித்தார்.

பிழையான கருவி மற்றும் நிறுத்தல் கருவிகளை உபயோகிக்கும் வர்த்தக நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (க-9)

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இன்று சென்னையில் பேரணி

## அணிதிரளுமாறு வைகோ அழைப்பு

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் இன்று நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்க வருமாறு கட்சித் தொண்டர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் விவரிக்க இயலாத துன்ப துயரத்துக்கு ஆளாகி உள்ளனர். சிங்கள அரசு அறிவிக்கப்படாத ஒரு யுத்தத்தை தமிழர்கள் மீது நடத்திவருகிறது. தமிழர் வாழும் பகுதிகளில் நாள்தோறும் தமிழ் இளைஞர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் கொல்லப்படுகின்றனர் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதிகளில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரக்கணக்கில் சிங்கள இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கோப்பாய் என்ற இடத்தில் சிங்கள இராணுவத்தால் கொடூரமாக கொல்லப்பட்ட அப்பாவி தமிழர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்புதைகுழிகளில் இருந்து அழுகிப்போன சடலங்களும், எலும்புக்கூடுகளும் தோண்டி எடுக்கப்பட்டு உள்ளன.

இந்த நிலையில் தாங்கள் செய்யும் கொடுமைகளை மூடி மறைத்துவிட்டு சமாதானப் பாதைக்கு திரும்ப இருப்பதாக சிங்கள அரசு சர்வதேச நாடுகளை ஏமாற்றும் வெளிவேடம் போடுகிறது.

இலங்கையிலுள்ள உண்மைநிலையை இலங்கைத் தமிழர்கள் படுகின்ற துன்பங்களை தமிழ் மக்களுடைய உணர்வுகளை நேரடியாக விருப்பு வெறுப்பு இன்றிக் கண்டு அறிவதற்கு இந்தியாவில் இருந்து அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அனுப்பப்படவேண்டும் என்ற கோரிக்கையையும், அதுபோல இலங்கையில் தமிழ் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தியா வருவதற்கும் இந்தியாவின் பிரதமரையும் மத்திய அரசின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கும் உடனடியாக வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தி அரசியல் கட்சிகளும் தமிழ் அமைப்புகளும் இன்று மாலை 4.00 மணிக்கு தமிழகமெங்கும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கின்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க பங்கேற்கிறது. மதுரையில் நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டத்தில் நான் கலந்துகொள்கின்றேன்.

அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட செயலாளர்களும் கழக முன்னணியினரும் பங்கேற்கிறார்கள். ம.தி.மு.க கழகத் தோழர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் வைகோ தெரிவித்துள்ளார். (ச)

# இனப்பிரச்சினைக்கு இந்திய சமஷ்டி முறையின் அடிப்படையில் தீர்வைக் காண அரசாங்கம் தயார்

## என்கிறார் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல



இனப்பிரச்சினைத் தீர்விற்கு இந்தியாவில் நடைமுறையில் உள்ள சமஷ்டி முறைமையை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

இந்தியாவின் சமஷ்டி முறைமைக்கு புலிகள் இணக்கம் தெரிவித்தால் தென்னிலங்கையில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்த அரசாங்கத்தால் முடியும் என்று திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சரும் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பான வரைவை தயாரிப்பதற்கான குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் குழு தொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

மேற்படி குழுவில் தமிழ் பிரதிநிதிகளும் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை வரைவது தொடர்பாக தென்னிலங்கையின் இணக்கப்பாட்டை பெறுவதற்கு இந்த புத்திஜீவிகள் குழு செயற்படும்.

இதேவேளை, இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பாக அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பேசப்படுகின்றது. உண்மையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் சமஷ்டி முறையை ஏற்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

ஆனால் இந்த முறைமைக்கு புலிகள் இணங்குவார்களா? என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

அவ்வாறு புலிகள் இணக்கம் தெரிவித்தால் தென்னிலங்கையில் இணைக்கப்பாட்டை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எவ்விதத்திலாவது இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணுகின்றது.

உலகில் பல்வேறுவடிவங்களைக்கொண்ட அதிகாரப் பகிர்வுகள் காணப்படுகின்றன. ஆனால் எமது நாட்டுக்குப் பொருத்தமான முறைமையை நாங்கள் தெரிவு செய்ய வேண்டும்.

இருப்பினும் இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பாக புலிகள் தென்னிலங்கையின் கருத்தை அறிந்துகொள்ள விரும்புகின்றார்கள் என்பது தெளிவான விடயமாகும்.

வடகிழக்கு மக்களின் கலாசார விடயங்கள், அன்றாட நடைமுறைகள் போன்ற அடிப்படை விடயங்களுக்கு ஏற்றவாறான அதிகாரப் பகிர்வு குறித்து பரிசீலிக்கவும் அரசாங்கம் தயாராக இருக்கின்றது. ஆனால் மத்தியிலும் சில அதிகாரங்கள் இருக்க வேண்டும். (க)

# சிறைச்சாலை ஆணையாளருக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை!

(கொழும்பு)

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன முறைப்பாடு செய்துள்ளார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக உளவுச் சேவையின் மூலம் தெரிய வந்துள்ளதாக நீதியமைச்சின் செயலாளர் சுஹத கமலத்திடம் வஜிர விஜேகுணவர்த்தன முறையிட்டிருக்கிறார்.

நீதியமைச்சின் செயலாளரினால் இது பற்றி பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவிற்கு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து 10பேரைக் கொண்ட பாதுகாப்புக் குழுவை உடனடியாக சிறைச்சாலை ஆணையாளருக்கு வழங்குமாறு இராணுவத் தலைமையகத்திடம் கோட்டபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கோட்டபாய ராஜபக்ஷவினால் இது குறித்து உடனடியாக இராணுவத் தலைமையகத்திற்கு எழுத்துமூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், சிறைச்சாலை ஆணையாளராக பதவியேற்று ஒன்றரை மாதங்களான போதிலும் இதுவரை இராணுவப் பாதுகாப்பு வீரர்கள் வழங்கப்படவில்லை என்றும் வஜிர விஜேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். (க)

## மயிர்க்கொட்டிகளினால் பலர் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் மீண்டும் மயிர்க்கொட்டிகள் பெருகி வருகிறது.

பலர் மயிர்க்கொட்டியின் தாக்கத்துக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அம்புலப்புலத்தை சேர்ந்த ஏ.அண்ணாமலை, நீதிமன்றில் கடமையாற்றும் பி.பரமேஸ்வரன் ஆகியோரே மயிர்க்கொட்டியின் தாக்கத்துக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-72)

## சுயாதீனக் குழுக்கள் விவகாரம்; தேசிய கிறிஸ்தவ சபை எதிர்ப்பு

ஜனாதிபதியின் சுயாதீனக் குழுக்கள் நியமனமானது ஆபத்தானது என்று இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியல் யாப்பு சபையை மீறி ஜனாதிபதி மஹிந்த இந்த நியமனங்களை அறிவிப்பதை ஏற்க இயலாது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்தவால் நியமிக்கப்பட்டோர் அத்தகைய பொறுப்புகளை ஏற்காமல் புறக்கணிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (க)

## இன்று ஒரு தகவல்

# நிகழ்காலம் நம் கையில்

ஒரு பெரிய மனோதத்துவ நிபுணர் 3250 பேரைச் சந்தித்து அவர்களிடம் ஒரே கேள்வியைக் கேட்டார். "நீங்கள் எதற்காக வாழ்கிறீர்கள்?" இது அவர் கேட்ட கேள்வி. அதில் 92 சதவீதம் பேர் ஒரே மாதிரியான பதிலைத்தான் சொல்லியிருக்கிறார்கள். "நாளைக்கு நல்லபடியாக வாழ்வதற்காக நம்பிக்கையுடன் இன்று காலம் தள்ளிக் கொண்டிருக்கிறோம்" என்றுதான் அவர்கள் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த உலகில் சந்தோஷமாக வாழுபவர்களை விட சந்தோஷமாக வாழப் போகிறோம் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் அதிகம். எதிர்காலத்தில் நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதற்காக இன்று அவஸ்தைப்படுபவர்கள்தான் அதிகம். ஆனால் கொஞ்சம் நிதானமாக யோசித்துப்பாருங்கள் எதிர்காலம் என்பது உண்மையிலேயே கிடையாது இது ஏதோ சித்தப்பிரமையில் சொல்வதாக நீங்கள் நினைத்து விடக் கூடாது.

எதிர்காலம் என்பது ஒரு கற்பனை அதில் நீங்கள் வாழ முடியாது அதில் நீங்கள் வாழும்போது அது உங்கள் நிகழ்காலமாகிவிடுகிறது. இப்போது உதாரணமாக அடுத்தவருடம், இதேமாதம், இதே திகதி அந்த நாள் இப்போது நமக்கு எதிர்காலம். அதை கற்பனையில் தான பார்க்கமுடியும் அடுத்த வருடம் அந்த நாள் வந்து விட்டதென்று வைத்துக்கொள்ளுங்கள் அன்று நாம் வாழப் போகிறோம் நாம் வாழும் அந்த நாள் நமக்கு நிகழ்காலம.

சரி இப்படியே சொல்லிக்கொண்டு போனால் எனக்கு இன்று என்னவோ ஆகிவிட்டது என்று யோசிக்க ஆரம்பித்து விடுவீர்கள் அதனால் இந்தக் கதையைப் படியுங்கள் .

ஒரு பெரிய செல்வந்தர் முகத்தை மிகவும் கம்பீரமாக வைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார். அதே நேரத்தில் மிகவும் தீவிரமான சிந்தனையில் இருப்பதுபோலவும் தெரிந்தது. அவரது மனைவி பார்த்தார். என்ன எதையோ மிகவும் தீவிரமாக சிந்திப்பது போல் தெரிகிறது?இன்று இவ்வளவு தாமதமாகவும் வருகிறீர்கள் என்ன காரணம்?" என்று கேட்டார். "அதுவா நமது ஏழு தலைமுறைக்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தேன் அதுதான் நேரத்திற்கு வீட்டுக்கு வரமுடியவில்லை என் சிந்தனைக்கும் அதுதான் காரணம்" என்றார் அவர்.

அவரது மனைவியோ அறிவாளி அதனால் வரப்போகும் ஏழு தலைமுறைகளைப் பற்றி இவர் இப்போதே கவலைப்படுவது அறியாமை என்று அவருக்குத் தோன்றியது. கொஞ்சநேரம் பேசாமல் இருந்தார். அதன்பின் மெதுவாக கணவரிடம் சென்றார். "இதோ பாருங்கள்! நம் வீட்டுக்கு வெளியே குடிசையில் ஒரு சந்நியாசி இருக்கிறார் நீங்கள் போய் அவரிடம் இந்த சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்றார். அவரோ வேண்டா வெறுப்போடு "சரி ! தா போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லி சாப்பாட்டை வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

அந்த சந்நியாசியிடம் போனார். "சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். செல்வந்தர்கையில் சாப்பாடு. நான் ஏற்கனவே எனது சாப்பாட்டை சாப்பிட்டு முடிந்துவிட்டேனே" என்றார் சந்நியாசி. "அப்படியென்றால் இதை இரவுச் சாப்பாட்டுக்கு வைத்துக்கொள்ளுங்கள்" என்றார் செல்வந்தர். சந்நியாசி மீண்டும் நிமிர்ந்துபார்த்தார். புன்முறுவலுடன் இரவுச்சாப்பாட்டைப்பற்றி நான் ஏன் இப்போதே கவலைப்படவேண்டும்.

சந்நியாசியின் இந்த செயல் பணக்காரரின் சிந்தனையில் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கியது. யோசிதுப்பார்த்தார். "இரவுச்சாப்பாட்டைப்பற்றிக்கூட கவலைப்டாத இந்த சந்நியாசி எவ்வளவு விசித்திரமானவர்க நானோ ஏழு தலைமுறைக்காக இப்போதே ஏற்பாடு செய்கிறேன். இவரோ அடுத்த வேளையைப் பற்றிக்கூட கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறாரே செல்வந்தரின் முகத்தில் சிரிப்பு வந்தது.

இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நிகழ்காலம் என்பதுதான் நம்மிடம் உள்ளது. அதில் நல்லபடியாக வாழ்வதற்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அதற்காக எதிர்காலத்தைப் பற்றிய பொறுப்பு நமக்குத் தேவையில்லை. என்று முடிவு செய்து கொள்ளக்கூடாது. அது வேறு இதுவேறு இந்தத் தத்துவத்தை அரைகுறையாக புரிந்துகொண்ட ஒருவர் என்ன செய்தார் தெரியுமா?

தத்துவத்தை சொன்னவரிடமே 100 ரூபா கடன் வாங்கினார். இவர் கடனைக்கொடுத்துவிட்டு "எப்போது திருப்பித்தருவீர்கள்? " என்று கேட்டார். "எதிர்காலத்தில் திருப்பித்தருவேன். அதைப்பற்றி இப்போதே ஏன் நினைக்க வேண்டும்? மறந்துவிடுங்கள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப்போய்விட்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐ.தே.க.செயற்படவில்லையாம்

## ஊடக அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி செயற்படவில்லை என்று ஊடக அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்ப குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அனுரா பிரியதர்சன யாப்ப கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் போருக்கு முனைவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இத்தகைய அறிக்கைகளைத்தான் விடுதலைப் புலிகளும் வெளியிடுகின்றனர். அரசின் அபிலாஷைகளை காட்டிக்கொடுக்காமல் அமைதி முயற்சிகளை ஜனாதிபதி ராஜபக்ஷ மேற்கொண்டு வருகிறார் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி நினைவில் கொள்ளவேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சியின் இரண்டு ஆண்டு கால ஆட்சியில் நடைபெற்ற நிழல்போரையும் அக்கட்சி மறந்துவிடக் கூடாது அனைத்து எண்ணெய் இறக்குமதி நாடுகளிலுமே வாழ்க்கைச் செலவீனப் பிரச்சினை உள்ளன இதற்காக ஐக்கிய தேசியக்கட்சி முதலைக் கண்ணீர் வடிக்க வேண்டியதில்லை.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்கலத்தைவிட தற்போதைய அரசாங்கம்எண்ணெய்விலையைக் கட்டுப்படுத்தத்தான் செய்கிறது ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி செயற்படவில்லை என்றார். (கு)

# அதிகாரப் பகிர்வுக் குழுவுக்கான பிரதிநிதியை நியமிக்க மஹிந்தவுக்கு ஐ.தே.க.நிபந்தனை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அதி காரப் பகிர்வு தொடர்பான குழுவுக்கு பிரதி நிதியை பரிந்துரைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனை விதித்துள்ளது.

ஓஸ்லோவில் விடுதலைப் புலிகள் வெளி யிட்டிருக்கும் அறிக்கை மற்றும் டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தினது நிலைப்பாடு முதலில் தெரிவிக்கப்படவேண்டும் என்று அக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் கடந்த முறை நடைபெற்ற தென்னிலங்கை அனைத்துக் கட்சிக் கூட்டத் தில் அதிகாரப் பகிர்வுக்கான வரைபை உரு வாக்க அனைத்துக்கட்சிகளின் சார்பில் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து அனைத்துக் கட்சிகளுக்கும் தங்களது கட்சிப் பிரதிநிதியின் பெயரை பரிந்துரைக்குமாறு வேண்டுகோள் விடுத்து அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன கடிதம் அனுப்பியிருந்தார்.

மேலும் அனைத்துக்கட்சி குழுவுக்கான ஆலோசனைக் குழுவையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதி மஹிந்த நியமிக்கும் குழு வில் இடம்பெறப்போவதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

அரசாங்கத்தினது நிலைப்பாடுகள் தெளி வுபடுத்தப்பட்டால் அதிகாரப் பகிர்வு தொடர் பான எந்த ஒரு ஆலோசனைக் கூட்டத்திலும் தாங்கள் பங்கேற்போம் என்றும் மஹிந்தவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கூறியுள்ளதாவது,

பல சுற்று அனைத்துக்கட்சிக்கூட்டம் நடத்தப்பட்ட நிலையிலும் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் ஒரு சிறு முன்னேற்றம் கூட ஏற்பட வில்லை.

தமிழீழவிடுதலைப்புலிகளை பேச்சுக்களுக்கு கொண்டு வருவதற்கான உத்தியை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் தெளிவான ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும்

அதிகாரப் பகிர்வுக்கான அனைத் துக் கட்சிக் குழு தொடர்பான இன்றைய அரசியல் விவகாரக் குழுவில் முடிவெடுக் கப்படும். (கு)

## ஆயுதக்கொள்வனவு விவகாரம்;
## பாகிஸ்தான் அரசு மறுப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஆயுதங்களை வாங்குவதற்கு பாகிஸ்தான் உதவுவதாக வெளி யான செய்திகளை பாகிஸ்தான் அரசு மறுத் துள்ளது.

ஆயுதக் கொள்வனவுக்காக 250 மில்லியன் டொலர் கடனுதவியை பாகிஸ்தான் வழங்கவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டிருந்தன.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகப் பேச் சாளர் சூரிய ஜமால் இது தொடர்பாக கூறு கை யில்,

இச்செய்தியில் எதுவித உண்மையும் இல்லை பாகிஸ்தானிய தகவல் திணைக்க ளத்திடம் விவரம் கேட்டுள்ளோம் ஊடகச் செய்திகள் ஆதாரமற்றவை என்றார்.

இதேவேளை, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனியா இது பற்றிக்கூறுகையில், பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் பொறுப்பில் தான் இவை உள்ளன எனக்கு இது குறித்து எதுவும் தெரி யாது என்றார். (கு)

# ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம் பற்றீசியன் அணியின் வசமாகியது

(யாழ்ப்பாணம்)

வீ.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட இறுதிப் போட்டி கடந்த 11 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மானிப்பாய் பரீஸ் கழக அணிக்கும் பற்றீசியன் கழக அணிக்கும் நடைபெற்ற இத் துடுப்பாட்ட இறுதிப் போட்டியில் பற் றீசியன் கழக அணி ஒரு விக்கெற்றால் வெற்றிபெற்று வீ. டி. ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண் ணத்தை கைப்பற் றியது.

இப்போட்டியில் பூவா தலையா நிகழ்வில் மானிப்பாய் பரீஸ் கழக அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பாடுவது என தீர்மானித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் கழக அணி 44.1 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றனர். இதில் வீரசிங்கம் 21, ஜெயராஜ் 24, ஜெயதீபன் 32, சிவாஸ்கர் 43 ஓட்டங்களை பெற்றனர்.

பற்றீசியன் கழக அணியை சேர்ந்த சுஜீவன் 9 ஓவர்களில் 30 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

179 ஓட்டங்களை பெற்று வெற்றிபெறுவதற்கு களமிறங்கிய பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி 34.3 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்கு 9 விக்கெற்றுக்களை இழந்து 1 விக்கெற்றால் வெற்றி பெற்றனர்.

வெற்றி பெற்ற பற்றீசியன் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசும் கிடைத்துள்ளது. இரண்டாம் இடத்தை பெற்ற மானிப்பாய் பரீஸ் கழக அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசும் கிடைக்கப் பெற்றது.

இப் போட்டியில் சிறந்த வீரராக பற்றீசிய கழக அணி வீரர் சுதர்ஸன் வெற்றிக்கிண்ணத்தையும் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார். வீ.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டியில் தொடர் நாயகனாக மானிப்பாய் பரீஸ் கழக அணியை சேர்ந்த என் ஜெய ராஜ் வெற்றிக் கிண்ணத்தையும் பணப்பரிசினையும் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் ஆர். ரவீந்திரநாதன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் கே. சதாசிவம் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர். இப்போட்டிக்கு சண் தயாளனும் ரி.வசீகரனும் மத் தியஸ்தர்களாக கடமையாற்றினர். (கு)



வீ.டி ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்ற பெற்ற பற்றீசியன் விளையாட்டு கழகத்தின் அணித் தலைவர் அன்டன் நைநஸ் பிரதம விருந்தினரிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தை பெறுகின்றதைபடத்தில் காணலாம்.




## போலந்தை வீழ்த்திய ஜேர்மனி இரண்டாம் சுற்றுக்கு செல்ல வாய்ப்பு

(டார்ட்மண்ட்)


போராட்டத்துக்கு பிறகு கடைசி கட்டத்தில் ஜேர்மனி அணி போலந்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன் மூலம் இரண்டு வெற்றிகளுடன் 6 புள்ளி பெற்று ஜேர்மனி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறுகிற வாய்ப்பை பெற்றுள்ளது.

ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் டார்ட்மண்ட்டில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் ஜேர்மனி, போலந்து அணிகள் மோதின. முதல் போட்டியில் ஜேர்மனி கோஸ்டாரிக்காவை வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அணித்தலைவர் மைக்கேல் .பாலக் அணிக்கு திரும்பியது போன்ற சாதக



அம்சங்களுடன் ஜேர்மனி களமிறங்கி யது. ஈகுவடோரிடம் தோற்ற போலந்து ஜெயித்தாக வேண்டிய கட்டாயத்தில் களம் புகுந்தது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பாலக் கொடுத்த பாசை பெற்ற மிராஜ்வோவ் குளோஸ் அருமையான சொட் அடித்தார். ஆனால் போலந்து கோல்கீப்பர் ஆர்தர் போரக் அபாரமாக தடுக்க வாய்ப்பு நழுவி யது. கடந்த போட்டியில் 2கோல் அடித்த குளோஸ் இம்முறை பலமுறை வாய்ப்பு களை வீணாக்கினார். பந்து பெரும்பாலும் ஜேர்மனி



வசம் இருந்தபோதும் போலந்து தற்காப்பை தகர்க்க முடியாமல் திணறி யது.

முதல் பாதி முடியும் நேரத்தில் ஜேர்மனிக்கு வாய்ப்பு கிடைத்தது. பிலிப்லாம் கொடுத்த பாசை பெற்ற லூகாஸ் போடொல் ஸ்கி அப்படியே சொட் அடித்தார். ஆனால் பந்து கோல் போஸ்டில் இருந்து விலகிச் செல்ல உள்ளூர் ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முதல் பாதி முடிவில் இரு அணி களும் கோல் எதுவும் அடிக்க இயலவில்லை.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் முரட்டு ஆட்டத்தில் இறங்கின. வீரர்களை யும் அடிக்கடி மாற்றின. ஆட்டத்தின் 75 ஆவது நிமிடத்தில் குளோசை வேண்டு மென்றே தடுத்த ரோடாஸ்லாவ் சேபாலவ் ஸ்கி இரண்டாம் முறையாக தவறு செய்ய நடுவரினால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதையடுத்து 10 பேராக குறைந்த போலந்து அணி ஜேர்மனியின் தாக்குதலை சமா ளிக்க திணறியது. போட்டி முடிவுறும் நேரத் தில் ஒடோன்கர் கொடுத்த பாசை பெற்ற அலிவர் நியூவில் அப்படியே வலைக்குள் தள்ள (91ஆவது நிமிடம்) ஜேர்மனி ஒருவழி யாக வெற்றி பெற்றது. இம்முறையும் கோல் அடிக்க தவறிய போலந்து தொடரில் இருந்து வெளியேற அதிக வாய்ப்புள்ளது.

அமிர்தன்

## சவுதி - ருனிசியா விறுவிறுப்பான போட்டி சமநிலையில் முடிவுற்றது

(முனிச்)

உலக கோப்பை போட்டியின் உச்ச கட்ட பரபரப்பை சவுதி அரேபியா, ருனி சியா அணிகளின் மோதலில் காணமுடிந் தது. ஒவ்வொரு நிமிடமும் அனல் பறந்த ஆட்டத்தில் சவுதி வெற்றியை கடைசி கட் டத்தில் ருனிசியா [illegible]த்துச்சென்றது. போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் திரில் சம நிலை ஆக இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன. ஜேர்மனியில் 18அவது உலக கோப்பை உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் முனிச்சில் நடந்த 'எச்' பிரிவு லீக் போட்டியில் வளைகுடாவின் வலிமைமிக்க சவுதி அரேபியா ஆபிரிக்கா வின் ருனிசியாவைச் சந்தித்தது. ஆட்டத் தின் இரண்டாவது நிமிடத்தில் ஜியாத் ஜசி ரியை பெனால்டி ஏரியாவில் வைத்து சவுதி வீரர்கள் தடுக்க ருனிசியா பெனால்டி கேட்டது.



ஆனால் அவுஸ்திரேலிய நடுவர் மார்க் ஷீல்ட்டு ஏற்க மறுத்துவிட்டார். முதல் பாதியில் ருனிசிய வீரர்கள் அசத்தலாக ஆடினர். சவுதி அரேபிய அணியோ பிறி-கிக் மற்றும் கோனர் வாய்ப்புகளை வீணா க்கி வெறுப்பேற்றியது. ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் பிறி-கிக் வாய்ப்பு மூலம் ஜியாத் ஜசிரி பிரமாத கோல் அடிக்க ருனிசியா 1-0 என்ற முன்னிலை பெற்றது. பின்தங்கிய நிலையில் இரண்டாவது பாதியை ஆரம்பித்த



சவுதியின் ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. வெற்றிக்காக கடுமையாகப் போராடியது.

ஆட்டத்தின் 57ஆவது நிமிடத்தில் முக மது நூரிடம் இருந்து பந்தை பெற்ற யசிர் அல் கடானி புயல் வேகத்தில் அடித்த சொட் சூப்பர் கோலாக மாற ஆட்டம் சமநிலை க்கு வந்தது. 80ஆவது நிமிடத்தில் யாசிர் அல் கடானிக்கு பதிலாக நான்காவது முறை யாக உலக கோப்பையில் விளையாடும் அனுபவ சமி அல் ஜபாரை சவுதி களமிறக் கியது.

இவர் வந்ததும் ஆட்டத்தில் சூடு பிடித் தது. தொடரின் மூத்த வீரரான (40ஆண்டு கள், 62 நாட்கள்) இவர் ருனிசிய வீரர்க ளுக்கு தண்ணி காட்டி தனி ஆளாகச் சென்று 84ஆவது நிமிடத்தில் அருமை யான கோல் அடிக்க சவுதி 2-1 என்ற முன்னி லையுடன் வெற்றியின் விளிம்பில் இருந்தது.

அடுத்தடுத்து இரண்டு கோல் வாங்கிய போதும், ருனிசிய வீரர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. போட்டி முடிவுறும் நேரத் தில் (93ஆவது நிமிடம்) இந்த அணியின் ராதிஜைதி ரொக்கெட் வேகத்தில் தலை யால் முட்டி கோல் அடிக்க, போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

கடைசி சில நிமிடங்களில் சுதாரிக்கத் தவறிய சவுதி அரேபியா கைக்கெட்டிய வெற்றிக்கனியை நழுவவிட்டது.

## உக்ரைனுக்கு கோல் சுனாமியாக மாறிய ஸ்பெயின்



உலக கோப்பை தொடரில் ஸ்பெயின் அணி கோல் சுனாமிதான். அறிமுக உக் ரைனை 4-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மகத்தான வெற்றிபெற்றது.

ஜேர்மனியில் 18 ஆவது உலக கோப்பை உதை பந்தாட்டத் தொடர் நடக்கிறது. நேற்று முன் தினம் நடந்த 'எச்' பிரிவு லீக் போட் டியில் அனுபவ ஸ்பெயின், அறி முக உக்ரைன் அணி கள் மோதின.

ஆட்ட்ம் ஆரம் பமாகி முதல் நிமி டத் திலிருந்தே ஸ்பெயின் ஆதிக் கம்தான்.

12ஆவது நிமிடத்தில் மார்க் கஸ் சென்னா, சுனாமி வேகத்தில் அடித்த சொட் உக்ரைன் கோல் கீப்பர் ஒலக்ஸாண்டர் ஷோவ் கோவ்ஸ்கி கையில் பட்டு கோல் போஸ்ட்டுக்கு மேலே பறந்தது. இதைய டுத்து கோனர் வாய்ப்பு வழங்கப்பட்டது. பந்தை சேவி ஹெர்ணாண்டஸ் அடிக்க அதைப் பெற்ற சேபி அலோன்சா அப் படியே தலையால் முட்டி வலைக்குள் தள்ள ஸ்பெயின் முதல் கோலை அடித்தது.

அடுத்து உக்ரைனின் ஆன்ட்ரிஜல் பெனால்டி ஏரியாவுக்கு வெளியே மரியானோ பெர்னி யாவை முரட்டுத்தனமாக தடுக்க மஞ்சள் அட்டை பெற்றார். இதற்காக ஸ்பெயினுக்கு 17 ஆவது நிமிடத்தில் பிறி -கிக் தரப்பட்டது.

இந்த வாய்ப் பில் 25 மீற்றர் தூரத்தில் இருந்து டேவிட் வில்லா அடித்த சொட் உக்ரைன் தற்காப்பு வயத்தை தகர்த்து அற்புத கோலாக மாற, ஸ்பெயின் 2-0 என்ற முன்னிலை பெற்றது.

முதல் பாதி முடியும் வரை இதே முன் னிலை நீடித்தது. இரண்டாவது பாதி ஆரம்ப மாகியதும் 2கோல் அடிக்க, ஸ்பெயின் 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இதுவே இத்தொடரில் மிகப்பெரிய வெற்றி யாக அமைந்தது. 3புள்ளிகளையும் தட்டிச் சென்றது.



ஒரு வீரர் வெளியேற்றப்பட்ட நிலையில், 10 பேராக விளையாடிய உக்ரைன் கடைசி வரை கோல் அடிக்க முடியவில்லை. காயத் திலிருந்து மீண்டு அணித்தலைவர் ஆன்ட்ரி ஷெப்சன் கோ இடம்பெற்றபோதும் இந்த அணியால் சாதிக்க இயலவில்லை.

## ஆர்ஜென்டினா வென்றால் கணவர் வாழ்நாள் முழுவதும் சமையல்!

### கொல்கத்தா தம்பதிகள் பந்தயம்

உலக கோப்பை உதைபந்தாட்ட போட்டி யில் கோடிக்கணக்கில் சூதாட்டம் நடைபெற்று வரும் இந்த வேளையில் கொல்கத்தாவில் கணவன்- மனைவி இடையே வித்தியாச மான முறையில் பந்தயம் கட்டப்பட்டுள்ளது.

கொல்கத்தாவில் இருந்து 225 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தர்காம்பூர் மாவட் டத்தில் வசித்து வருபவர் பிரபீர் ஷன்யால். டாக்டரான இவரது மனைவி சித்ரா வீட்டு வேலைகளை மட்டும் செய்துவருகிறார்.

இவர்கள் இருவரும் கால்பந்து ரசிகர் கள். அதிலும் ஷன்யால் பிரேசிலின் தீவிர ரசிகர்.

சித்ரா அர்ஜென்டினா வீரர்களின் ரசிகை. ஷன்யால் தற்போது மருத்துவமனை யில் ஆர்ஜென்டினா வீரர்களின் கால்பந்து ஆடையை அணிந்து கொண்டு நோயாளி களுக்கு சிகிச்சை செய்து வருகிறார். இவர் கள் இருவரும் வித்தியாசமான முறையில் தங்களுக்குள் ஒப்பந்தம் போட்டுள்ளனர்.

அதாவது பிரேசில் அணி ஆர்ஜென்டினா விடம் தோற்றால் ஷன்யால் தன் வாழ்நாள் முழுவதும் மனைவி சித்ராவுக்காக சமையல் வேலைசெய்வேன் என சபதம் எடுத்துள்ளார்.

அதேபோல் ஆர்ஜென்டினா வெற்றி பெற்றால் சித்ரா தான் சுயமாக சம்பாதித்து ஷன்யாலுக்கு ஜீன்ஸ், சேட் எடுத்துக்கொடுப்பதாக கூறியுள்ளார். இதற்காக இருவரும் 100 ரூபாய் முத்திரை ஒட்டிய கடதாசியில் கையெழுத்து போட்டுகொடுத்துள்ளனர்.

இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தை கள் உள்ளனர். எந்த அணி ஜெயித்தாலும் குழந்தைகளுக்கு ஸ்டார் ஹோட்டலில் அவர் கள் விருந்தளிப்பதாக கூறியுள்ளனர்.

## இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் (இரவு) |
|---|---|---|
| ஆர்ஜென்ரீனா-சரிபியா | ஜெல்சன் கிரிசன் | 6.30 |
| நெதர்லாந்து-ஐவரி கோஸ்ட் | ஸ்டுட்கார்ட் | 9.30 |
| இத்தாலி -அமெரிக்கா | ஹைசெர்சலூட்டன் | 12.30 |

# சுவாமி விவேகானந்தர்

## ஆத்மாவின் அழைப்பு

ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றின் வரலாற்றையுமே நரேன் படித்தது உண்மைதான். எனினும் பி.ஏ.வகுப்பில் அவன் படிக்க வேண்டியிருந்த கிரீன் என்பார் எழுதிய ஆங்கில மக்கள் சரித்தி



ரத்தை மட்டும் அவன் முறையாகப் பயிலவில்லை. பரீட்சைக்கு ஒரு மாதம் தான் இருந்தது. நரேனிடம் புத்தகப் பிரதிகூடக் கிடையாது. அப்போதுதான் புத்தகமே வாங்கினான். அதைப் படித்து முடிக்குமட்டும் தன் அறையை விட்டு வெளியேறுவதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டான். மூன்று நாட்கள் இரவு பகலாக கிரீன் சரித்திரத்திலேயே ஊறிவிட்டான். அத்தனை விசியங்களும் அவன் உள்ளத்தில் ஊறிவிட்டன.

இப்படித்தான் பல பாடங்களைப் பரீட்சைக்கு முன்பாகவே தொடக்கத்திலிருந்து முதன் முறை யாகப் படிப்பான் நரேன். காபியையோ தேநீரையோ அருந்தியப்படி இராக் கண் விழித்துப் படிப்பான்.

இதுபோல பி.ஏ.பரீட்சைக்கு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருக்கும்போதுதான் பரீட்சைக்கு முதல் நாள் காலை ஒரு விசித்திர எண்ணம் எழுந்தது. அவனுக்கு 'இந்தக்கல்வியினால் ஸ்ன்டயன்? மெய்ப்பொருள் எனப்படும் சத்திய தரிசனத்துக்கு இந்தப் படிப்புச் சிறிதேனும் உதவுமா?' என்ற வினா அவனுடைய உள்ளத்தில் பிறந் தது. நரேனுக்கும் தெரியாமல் அவன் உள் மன தில் முட்டிக் கொண்டிருந்த எண்ணம் அன்று வெளிப்பட்டுவிட்டது.

ஸ்தூல உலகைவிட சத்தியமான தொரு சூட்சும உலகில் உலவிக் கொண்டிருந்தது நரேந்திரனின் உள்ளம். அவனுடைய கால்கள் கல்லூரி மாணவர் விடுதியில் உலவிக்கொண்டிருந்தன. தன் வயம் இழந்தாற் போன்ற தோற்றமும், கொழுந்து விட்டெரியும் முகப் பிரகாசமுமாக நண்பன் ஒருவனின் அறைவாயிலில் நின்று கொண்டான் நரேன். அவனுடைய இனிய உணர்வுகள் இனியதொரு பாடலாக வடிந்தன.

மலைகாள், முகில்காள், மலய
மாருதங்காள்!
மூலப்பொருள் ஊகிமை பாடி
மகிழுங்கள்!
சூரியர்காள், சந்திரர்காள்,
சுடர்வீசும் தாரைகைகாள்!
சத்தியப் பொருள் பெருமை
பாடி மகிழுங்கள்
பாடி மகிழுங்கள், மகிழ்ந்து
ணர்ந்து பாடுங்கள்

மலையும், முகிலும், மலய மாருதமும், சூரியனும், சந்திரனும், சுடர்தாரைகையும் பாட வேண்டியதையெல்லாம் நரேந்திரனே பாடினான். பாடி மகிழ்ந்தான். மகிழ்ந்து பாடினான்.

மணி ஒன்பதாயிற்று. நரேந்திரனுக்கோ இவ்வுலகப் பிரக்ஞையே இல்லை. அவனுடைய நண்பன் ஒருவன் தான் அவனது நினைவை இவ்வுலகுக்குத் திருப்பினான். இவ்வுலகில் இந்தியாவில் கல்கத்தாவில் மறுதினம் நடக்கவிருக்கும் பரீட்சைக்கு நரேனுடைய நினைவைத்திருப்பினான். ஆனால் அந்தப் பரீட்சை சமாசாரம் மிகவும் அற்பமாகத் தான் பட்டது. நரேந்தினுக்கு ஏனோ தானோ வென்று மறுநாள் பரீட்சை எழுத அமர்ந்தான் தேறியும் விட் டான்.

* * *

நரேந்திரனுக்கு சங்கீதத்தில் ஆழ்ந்ததொரு நாட்டம் இருந்தது. முறைப்படி சங்கீத சிக்ஷை பயின்றவன் அவன் அஹமத்கான், வேணி குப்தா என்ற இரு இசையும் சம்பிரதாயமான முறையில் நாலைந்து ஆண்டுகள் பயின்றான். முக்கியமாக, ஹிந்தி உருது, பெர்ஷிய மொழிகளிலுள்ள துதிப் பாடல்கள் பலவற்றை அஹமத்கானிடம் கற்றுக்கொண்டான்.

கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியர்கள், இந்தியப் பேராசிரியர்கள் யாவருடைய போற்றுதலை

## அத்தியாயம் - 09

யும் பெற்றான் நரேன். நரேந்திர நாதனைப் பற்றி ஹேஸ்டிகூறியதைப் பாருங்கள்: 'நரேந்திர நாதன் ஒரு மேதை. நான் பலப்பல நாடுகளில் பிரயாணம் செய்திருக்கிறேன். எனினும் படைத்த ஒருவாலிபனை ஜெர்மனி நாட்டு சர்வ கலாசாலையில் தத்துவ சாஸ்திரம் பயிலுபவர்களிடையே கூட நான் கண்டதில்லை. வாழ்க்கையில் தனது தனித்துவத்தை அவன் நிச்சயமாகப் பொறிக்கப் போகிறான்.'

நரேனுடன் படித்த ஒருவர் பிற்காலத்தில் அவனது மாணவ வாழ்க்கை பற்றிக் கூறும்போது, 'நரேந்திரர் பேசுவதைக் கேட்கவே எங்களுக்கு தனி ஆனந்தம் உண்டாகும். அவருடைய குரலே கானமாக இருக்கும். அவருடைய பேச்சழகை ரசிப்ப தற்காகவே நாங்கள் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி வாதம் தொடங்குவோம். அவர் மிகவும் ஆகர்ஷண முள்ளவர். அதோடு தானாகவே புதிய கருத்துகளைக் கூறும் ஆற்றல் பெற்றவர். அந்த நாளிலிருந்தே பலவீனத்தை எங்கு கண்டாலும் வெறுத்தார் அவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வாதத் திறனில் தனிச் சிறப்பு படைத்ததிருந்தான் நரேந்திரன். வாதமிடும் போது அவன் பேச்சில் தொனித்த அழுத்தமும், ஆவேசமும், தீட்சண்யமும் கேட்போரை அயர்ந்து விடச்செய்யும். கல்லூரி நாட்களில் அவனது நாவன்மையைக் கண்டு தேசத் தலைவரும், சிறந்த பேச்சாளருமாகிய சுரேந்திரநாத் பானர்ஜி மிகவும் பாராட்டியுள்ளார்.

நரேந்திரனுக்கு அடிநாளிலிருந்தே தன் எண்ணங்கள் ஏனையவருடையதைப் போன்றதல்ல என்பது தெரியும்; தான் தனியொரு முறையில் உருவாகப் போகிறோம் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

இயற்கை வேகத்தைத் திருத்துவதுதானே பிரம்மச்சரியம்? எனவே, நரேந்திரனுக்குப் பிரம்மசரியத்தில் ஆழ்ந்த நாட்டம் இருந்ததில் வியப்பில்லை அல்லவா? பிரம்மசரியம் என்பதை வெறும் உடல் தூய்மையாக மட்டும் அவன் கருதவில்லை. சரீரத்தைப்போலவே செயல், சொல் சிந்தனை யாவற்றிலும் தூய்மையாக இருப்பதையே நரேந்திரன் பிரம்மசரியம் எனக் கருதினான். பிரம்ம மாவதற்கு விரும்புவர்கள் அனுஷ்டிப்பது பிரம்மசரியம் என்ற மறைமொழிப்படி சத்தியானுபவத்துக்கு மார்க்கமான பரிசுத்தமே. பிரம்மசரியம் என்று நரேந்திரன் கருதினான். இளமையில் ஆளாகக்கூடிய எந்தச் சபலத்துக்கும் இடம்தராது மிகவும் ஜாக்கிரதையாக வாழ்ந்த நரேன், எதோ ஒன்று தன்னைத் தவறான மார்க்கத்தில் செல்லவிட்டாமல் பிடித்திழுத்துக் காத்து வருவதாக உணர்ந்தான். நரேந்திரனே அறியாவிட்டாலும் அவனுக்காகவே காத்திருந்த பரமஹம்ச தேவரின் ரக்ஷணசக்தி தானோ அது?

நரேந்திரனுக்குக் கலியாணம் செய்துவைத்துக் 'கண்குளிர' காண வேண்டும் என்று விசுவ நாத தத்தர் விரும்பியபோது அவனது பிரம்மசரியம் அதனை எதிர்த்தது. நல்ல நல்ல வரன்கள் வந்தன. நரேந்திரன் இங்கிலாந்து சென்று ஐ.ஸி.எஸ்ஸுக்குப் படிக்க வசதி தருமளவுக்கு வரதட்சிணை தரக் கூடியவர்களெல்லாம் இந்த அற்புத இளைஞனுக்கு வலை வீசினார்கள். ஆனால் கலெக்டர் பதவிக்காக கலியாணத்தை ஒப்புக் கொள்ள கூடியவனல்லவே நரேந்திரன்? ஞான சாம்ராஜ்யத்தின் சிம்மாசனமே அல்லவா அவனுக்காகக் காத்து கொண்டிருந்தது? எப்படியோ ஒரு விதமாகக் கலியாணப் பேச்சுகளும் முறிந்தே வந்தன.

வாலிபப்பருவத்தில் நரேந்திரன் துயில் கொள்ளுமுன் அவன் மனக் கண்ணுக்கு முன்னால் இரண்டு சித்திரங்கள் தோன்றும். சுகபோகமும்த செல்வமும், அதிகாரமும், பெயரும், புகழும் பெண்டிரும், பிள்ளையும், சூழ்ந்த வாழ்க்கை ஒன்று. உடைமை எதுவுமே இன்றிப்பெரிய உலகிலே, தன்னந் தனியாளாக, ஒரே உடையுடன் சுற்றி, பரந்த வானத்தையோ நீண்டுயர்ந்த மரக்கிளையையோ கூரையாகக் கொண்ட திறந்த வெளியில் உறங்கி, நீர்நிலை கண்ட இடத்தில் இஸ்னானமும், கனியோகாயோ கனிந்த உள்ளத்தோடு தாமே பிட்சையிடுவார் கிடைக்கும் போது மட்டிலுமே உண்டு, பரமாத்மாவில் உள்ளத்தைப் பதித்து சஞ்சரிக்கும் சன்னியாச வாழ்க்கை இன்னோர் ஓவியமாக விரியும். இவ்விரு சித்திரங்களையும் நரேந்திரன் கூர்ந்து கவனிக்க கவனிக்கப் பின்னரே அவனைக் கவர்ந்து இழுக்கும். முதலில் கண்ட ஓவியத்தின் வண்ணங்கள் மெல்ல மெல்ல மங்கி அடியோடு தேய்ந்து போகும்.

* * *

பிரம்ம சமாஜத்தைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்வோம். இந்து தர்மத்தின் உத்தமமான அம்சங்களைக் காத்து, அதன் 'குறுகிய மனப்பான்மை'யைப் போக்கடித்து அதனை 'விசால

**ஆன்மீகப் பாதை**
**ரா.கணபதி**

மான' தாக்க வேண்டும் என்பது தான் பிரம்ம சமாஜத்தின் நோக்கம்.

இந்துசமயத்தில் வேறு பல மாறுபாடுகளும் செய்ய வேண்டும் என பிரம்ம சமாஜத்தினர் கருதினர். பல தெய்வங்களை வழிபடுவது விக்கிரக ஆராதனை, ஆண்டவன் அவதரிக்கிறான் என்ற நம் பிக்கை, குருமுகமாகவே உபதேசம் பெற வேண்டும் என்ற கோட்பாடு, வேத வாக்கியங்களை மறுக்காது எற்பது இவைகள் எல்லாவற்றையும் பிரம்ம சமாஜத்தினர் எதிர்த்தனர். ஜாதி பேதங்களை ஒழிப்பது, பெண் கல்வி, விவாகப் பருவத்தை உயர்த்துவது, விதவா விவாகம் முதலியன அவர்களது சமூக நிர்மாணத் திட்டத்தின் அம்சங்களாகும். ராஜா ராம் மோகன்ராய் தான் பிரம்ம சமாஜத்தின் தோற்றுவாக்குக் காரணபுருஷர். (தொடரும்)

# குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் முதல் நாள்நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்திய சாலை இரத்தவங்கியும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடாத்தும் குருதிக் கொடையாளர்களைக் கௌரவிக்கும் குருதிக் கொடையாளர் முதலாவது தின நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கி கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் செஞ்சிலு வைச் சங்கத்தலைவர் வி.க.கணேசலிங்கம் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

விபத்துகள் அனர்த்தங் கள் முதலியவற்றில் சிக்கியவர்கள், நோயாளர்கள் முதலியவர்களுக்கு தினமும் கணிசமான அளவு இரத்தம் தேவைப்படுகிறது தேவைக்கேற்ற அளவு இரத்தம் இரத்த வங்கியில் இருப்பில் இல்லாத காரணத்தால் குருதிக் கொடையாளர்களிடமிருந்தே அதனைப் பெற வேண்டிய நிலையிலேயே நாங்கள் இருக்கிறோம்.

எங்களுக்குத் தேவைப்படும் இரத்தத்தை எல்லாரிடமிருந்தும் பெற்றுவிட முடியாது. குருதிக் கொடையாளர்களின் வயது, நிறை பரம்பரை ஏற்கெனவே நோயினால் பாதிக்கப்பட்டவர்களா என்பதை ஆராய்ந்த பின்னரே குருதியைப் பெற்றுக்கொள் கிறோம் எனத் தெரிவித்தார்.

சேகரிக்கப்படும் குருதியை 42 நாட்களுக்கு மாத்திரமே வைத்திருக்க முடியும் எனவும், எந்தக் 'குரூப்' இரத்தம்தேவைப்படுகிறதோ அந்த 'குரூப்' இரத்தத்தையே நாங்கள் பெற்றுக்கொள்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் மூலமாகவும் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமும் தற்பொழுது இரத்தத்தை பெற்று வருவதாகவும், எமது நோக்கம். மக்களுக்கு உயிர்க்காப்பு செய்வதே என்றும், 76 மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தார்

இந்நிகழ்வில் ஏராளமான குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள். (து-133)

# கலாசார பண்பாட்டுத் துறைகளை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

கலை, இலக்கிய, கலாசார பண்பாட்டுக்கென தனித்துவமானதோர் வரலாற்றைக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தில்த இன்று பல்வேறு அனர்த்தங்கள் காரணமாக ஒருவித தேக்க நிலையை அடைந்திருக்கும் கலாசார, பண்பாட்டுத் துறைகளை ஊக்குவித்து, அவற்றை வளர்த்தெடுப்பதற்கான விசேட நடவடிக்கைகளை தான் மேற்கொண்டு வருவதாக ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது வருகை தந்திருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது மக்கள் அனைத்துத் துறைகளிலும் பயன்களை அனுபவிக்கக்கூடிய வகையில் சிறந்ததொரு வாழ்க்கை நிலையை கட்டியெழுப்புவதே எனது இலக்கா கும். ஏற்கனவே நான் இந்து சமய கலாசார அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த போது, யாழ்மாவட்டத்தில் சமய மற்றும் கலாசாரத் துறைகளை வளர்த்தெடுப்பதற்காக பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன், கலை இலக்கிய வளர்ச்சிக்காகவும் பாரிய அளவில் நிதி உதவிகளை வழங்கியுள்ளேன்.

யாழ்.மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தல், அபிவிருத்தி, புனரமைப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பணிகள் போன்றவற்றுக்கு முதலிடம் கொடுத்து நான் செயற்பட்டு வருகின்ற அதேவேளை, இப்பகுதியின் கலை, கலாசார நடவடிக்கைகளை ஊக்குவித்து, அவற்றை வளர்த்தெடுப்பதற்குரிய அவதானங்களைத்செலுத்திவருகின்றேன் என்றார். (கு)

# மன்னார் கடலில் கைதான 13 பேருக்கும் விடுதலை!

(மன்னார்)

மன்னார் கடலில் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 13பேர் மறுநாள் செவ்வாய்க் கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலையைச் சேர்ந்தவர்களாவர் விடுவிக்கப்பட்ட இவர்கள் மன்னார் சென்.லோறன்ஸ் பாடசாலையில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

ஏற்கனவே இந்தப்பாடசாலையில் 109 அகதிகள் தங்கவைக் கப் பட்டிருக்கிறார்கள். இதே வேளை மன்னார் சென்மேரிஸ் வித்தியாலயத்தில் 77 அகதிகள் தங்க வைக் கப்பட்டுள்ளனர். (கு-9)

# படையினருக்கு காத்திருக்கும் அடுக்கடுக்கான அதிர்ச்சிகள்



## க. வே. பாலகுமாரன்

(கிளிநொச்சி)

**படையினருக்கு அடுக்கடுக்கான அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க. வே. பாலகுமாரன் எச்சரித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ வானொலியான புலிகளின் குரல் அரசியல் அரங்கம் நிகழ்வில் கடந்த சனிக்கிழமை அவர் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம் இங்கு தரப்படுகிறது.

ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் ஊடாக வெளிவந்த செய்திகள் எல்லாம் அதிர்ச்சி, அதிர்ச்சி என்று கூறுகின்றது. இலங்கை அரசுக்கு அதிர்ச்சி, நோர்வே தரப்புக்கு அதிர்ச்சி, சர்வதேசத்திற்கு அதிர்ச்சி என்று வருகின்றது.

### "அதிர்ச்சி நோய் எமக்கல்ல"

"அதிர்ச்சி நோய் எமக்கல்ல" என்ற தலைப்பில் சில கருத்துக்களை பகிர்ந்துகொள்கிறோம். இந்த தலைப்பு என்னுடைய தலைப்பு அல்ல. இருப்பினும் இது பெரும் இனப்பற்றாளரான நகு பத்மநாதன் ஐயாவினுடைய தலைப்பு. அவர் திருக்குறளை அடிப்படையாக வைத்து சிறு கைநூலை எழுதியிருந்தார். அதன் தலைப்புத்தான் அதிர்ச்சி நோய் எமக்கல்ல என்பது. விடுதலைப் புலிகளினுடைய ஈகம். அவர்களுடைய தற்துணிவு, அவர்களுடைய முயற்சி எல்லாம் படையினருக்கு எப்போதும் அதிர்ச்சியைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றது.

தமோமாற்றத்தை கொடுத்துக்கொண்டே இருக்கின்றது. அதிர்ச்சி கொடுப்பவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். ஆதலால் தமிழ் மக்கள் அதிர்ச்சி அடையமாட்டார்கள் என்ற அடிப்படையில் திருக்குறளை அடிப்படையாக வைத்து அவர் சில கருத்துக்களை எழுதியிருந்தார். "அதிர்ச்சி நோய் எமக்கல்ல" என்கின்ற தலைப்பு எமக்கு மிக முக்கியமான தலைப்பாக தமிழ் மக்கள் தமது மனங்களில் வைத்திருத்தல் வேண்டும்.

இன்று எமது அன்புக்குரிய மக்கள் அதிர்ச்சியடையக்கூடாது. அதிர்ச்சியை எதிரிக்கு கொடுக்க வேண்டும்.

நாங்கள் அதிர்ச்சி கொள்ளாது இருக்க வேண்டும். எப்போதும் அதிர்ச்சி எதிரிக்கே வரலாறு விளைவித்துக்கொண்டு வருகின்றது. வரலாற்று ரீதியாக எதிரி என்று கூறும் போது எங்களுடைய எதிரியல்ல. மக்கள் கூட்டத்திற்கு எதிரி என்று கூறும் போது அடக்கு முறையாளன், ஒடுக்குமுறையாளன், ஏகாதிபத்தியவாதி, சர்வாதிகாரி என்று கூறக்கூடிய அதிகாரங்களை கைகளில் வைத்திருக்கின்றவர்களுக்கு எப்போதும் ஒடுக்கப்படுகின்ற மக்கள் படுகின்ற துன்பங்கள் தெரியாது. அவர்களுடைய மனங்களில் விளைகின்ற அந்த தீ பற்றி எரியக்கூடிய அந்த வேணாவா போன்ற வற்றையெல்லாம் அவர்கள் அறியமாட்டார்கள். அவ்வாறு அறியமாட்டாத நிலையிலேயே அவர்கள் எப்போதும் இறுதிநேரத்தில் பெருத்த அதிர்ச்சிகளை சந்திப்பார்கள். மக்களினுடைய புரட்சி அல்லது விடுதலைக்கான போர் நடக்கும் போது உண்மை அறிய முடியாத நிலையிலேயே அவர்கள் எப்போதும் பொய்மைக்குள் வாழ்கின்ற படியால் நிச்சயமாக அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அடைந்து கொண்டிருப்பார்கள். இது வரலாற்றில் பதியப்பட்ட செய்தியாக இருக்கின்றது.

நாங்கள் வரலாற்றில் இருந்து சில உதாரணங்களை நாம் பார்ப்போமேயானால் இங்கிலாந்து ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்த போது இங்கிலாந்து பெரும் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அடைந்தது. இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவிடுதலை பெற்று சுதந்திரப்போரை நடத்திய போது இங்கிலாந்து பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது. அதேபோன்று அமெரிக்கா காலக்கிரமத்தில் பல அதிர்ச்சிகளை சந்தித்தது. கியூபா, வியட்நாம் ஆகிய நாடுகள் விடுதலை பெற்ற போது அல்லது அண்மையில் செப்டம்பர் 11 என்று கூறப்படும் தாக்குதல் நடந்த போது அல்லது ஈராக்கில் இப்போது அமெரிக்கா பேரதிர்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

### சர்வதேசத்திற்கு அதிர்ச்சி

இன்னும் கூறப்போனால் விடுதலைப் புலிகளினுடைய போராட்டத்தின் விளைவாக சர்வதேசம் பேரதிர்ச்சியை சந்தித்தது. உதாரணமாக ஆனையிறவு வீழ்ச்சியின் போதும் அக்கினிச் சுவாலையை நாம்வென்றபோதும் உலகம் பேரதிர்ச்சியை சந்தித்தது. ஆகவே எப்போதும் அதிர்ச்சி அடைபவன் ஒடுக்குமுறையாளனாக இருப்பான் என்பது தான் எங்களுடைய முக்கியமான செய்தியாக இருக்கின்றது. இது வரலாற்றில் பார்க்கக்கூடிய செய்தி .

எங்கள் மீது தடைவிதிப்பதற்கு அமெரிக்காவும் இங்கிலாந்தும் தான் பெரிய ஊக்கத்தையும் தூண்டுதலையும் கொடுத்ததாக நாங்கள் அறிகின்றோம். இவர்கள் எல்லோரும் தாங்கள் அடைந்த அதிர்ச்சிகளை மறந்துவிட்டார்கள். எதிரிக்கு இவர்கள் கொடுத்த அதிர்ச்சிகளையும் இவர்கள் அறியமாட்டார்கள்.

எங்களுடைய வரலாற்றில் ஒரு உதாரணத்தை கூற முடியும். கரும்புலி வடிவம் என்பது உலகத்திற்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக புரிந்துகொள்ள முடியாத புதிராக என்றும் இருக்கின்றது.

கரும்புலி வடிவம் பற்றி ஆய்வு செய்த அனைத்து ஆய்வாளர்களும் மிகுந்த குழப்பமடைந்திருக்கின்றார்கள். அதாவது கரும்புலிகள் என்று கூறப்படுகின்ற அந்த வடிவம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குஉள்ளே மூளைச்சலவை செய்யப்பட்டோ அல்லது மத ரீதியான பற்றின் அடிப்படையிலோ அல்லது வேதனை விரக்தியின் முடிவாகவோ எடுக்கப்பட்ட முடிவு அல்ல என்பது ஒருபயிற்றுவிக்கப்பட்ட மிகத்தெளிவான மகிழ்ச்சியோடு அமைந்த அணியாக வளர்க்கப்பட்ட விதம் குறித்தும் உலகம் பேரதிர்ச்சியடைந்திருக்கின்றது.

இப்படியான அதிர்ச்சிக்கு என்ன காரணம் எனில் ஒடுக்கப்படுகின்ற மக்களுடைய மனங்களை அறியமாட்டாதவர்கள் எப்போதும் இறுதியில் அதிர்ச்சியடைவார்கள் என்பது இன்று நோர்வேயில் நடந்த சம்பவங்கள் உதாரணமாக இருக்கின்றது.

### படையினருக்கு அதிகரிக்கும் அதிர்ச்சி

அடுக்கடுக்கான அதிர்ச்சிகள் படையினருக்கு. காத்திருக்கின்றன. தலை குனிந்த எமது மக்கள் தலை நிமிரும்போது இறுதி அதிர்ச்சி அவர்களுக்கு காத்திருக்கின்றது என்பதனை கூறிக்கொள்கிறோம்.

அண்மைக்காலமாக நடக்கின்ற அவலச் சம்பவங்கள் தரக்கூடிய உளவியல் ரீதியான அழுத்தங்கள் குறித்து நிச்சயமாக நாங்கள் எங்களுக்குள்ளே கலந்து பேச வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அண்மையில் திரு மாஸ்டர் கட்டுரையில் எழுதும் போது கூறினார்.

தமிழீழ மக்கள் அதிகம் பாதிப்புற்ற, துயருற்ற மக்களாவர். அளவால் சிறிய இந்த மக்கள் கூட்டம் தன் அளவைவிடவும் பாரிய சுமைகளை, துயரங்களை சுமந்து நிற்கின்றது. ஈவிரக்க மின்றி ஒடுக்கப்படும் அப்பாவி மக்கள் இவர்கள். உலக அரசுகள் இவர்களது நியாயபூர்வமான உரிமைகளுக்குள்ளாலும் துயரங்களுக்குள்ளாலும் பார்ப்பதனை விட எரியும் வீட்டில் கொள்ளி பிடுங்கவே பார்க்கின்றார்கள்.

எல்லாவிதமான தர்மபோதனைகளும் ஜனநாயகங்களும் உரிமைகளும் இவர்களுக்கு முன்னால் பிணவாடை வீசுவதையே இந்த மக்கள் பார்க்கின்றார்கள் என்றார். இப்போது எமது மக்கள் பிணவாடை வீசுவதனை பார்க்கின்றார்கள். செம்மணி புதைகுழிகளைத் தாண்டி கைதடி–தரவைவெளியிலேயே இப்போது பிண வாசம் வீசுவதனை தமிழீழ மக்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அது எங்கள் மக்கள் மனங்களில் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்துவதனை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் இப்போது அது பற்றி உங்களோடு பேசவேண்டும் என்று கூறியும் இந்த அதிர்ச்சிநோய் பற்றி நாங்கள் நன்றாக ஒரு விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### எமது மக்களுக்கு ஏற்படும் அதிர்ச்சி

அதிர்ச்சி கொடுக்கின்ற எங்களுடைய மக்கள் சிங்களத்தரப்பால் தங்களுக்கு விளைவிக்கின்ற அதிர்ச்சிகளை எவ்வாறு எனினும் தாங்கவேண்டிய அவசியம் இருக்கின்றது. சிங்களத் தரப்பினுடைய இலக்கானது ஒடுக்கப்படுகின்ற தமிழ்மக்களினுடைய மனங்கள் தான். அந்த மனங்களை மிக மோசமாக பாதிப்பதற்கும் ஒரு உளவியல் அழுத்தம்கொடுப்பதற்காகவும் தான் இன்று இந்த விடுதலை வலயம் என்று கூறக்கூடிய வன்னி நிலப்பரப்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் மிகப் பெரிய மன அழுத்தத்திற்குள் தமிழ் மக்கள் உள்ளாக்கப்படுகின்றார்கள். நிரந்தர வாழ்வு கேள்விக்குறியாகி நாளாந்த வாழ்வு கேள்விக்குறியாக்கப்பட்டு ஒருவிதமான அராஜக நிலைமை நிலவுவதனை நாங்கள் இப்போது பார்க்கின்றோம். இத்தகைய நிலைமையில் மனித மனம் செயற்படுகின்ற விதம் குறித்து சற்று ஆழமாகப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

மனித மனம் செயற்படும் விதம் அலாதியானது. மனிதனுடைய மூளை என்பது எந்த விதமான நெருக்கடிக்கு முகம் கொடுத்து புதிய புதிய வழிகளைக் கண்டுபிடித்து அதே வேளையில், சில வேளைகளில் மனமானது இன்னொரு வகையான நிலைப்பாடு எடுக்கும். மனித மனம் எப்போதும் வடிகட்டியாக செயற் படும். தனக்கு வாய்ப்பு இல்லாத, உவப்பு இல் லாத செய்திகளை ஏற்க மறுக்கின்ற மனித மனம் அந்த செய்திகளை வடிகட்டி நிராகரித்து விடுகின்ற நிலை இருக்கின்றது.

இப்படியான கொலை நடக்கும்போது எங்களுடைய மக்கள் இந்த மன நிலைக்கு செல்வார்களா என்று கூறினால் படைகளுக்கு அது சாதகமாகிவிடக்கூடியதொரு ஆபத்தான செயல் இருப்பதனை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த மாதிரியான நெருக்கடிகள், மன அழுத்தங்கள் வரும் போது சில வேளைகளில் எங்களுடைய மக்களினுடைய மனங்களில் இப்படியான நிலைப்பாடுகள் வரக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

ஒன்று இந்த செய்திகளை ஏற்க மறுக்கின்ற தன்மை. இரண்டாவது மனதில் இவற்றை ஆழப்புதைத்து மேலோட்டமாக எதுவும் நடக்காதது போல செயற்படுகின்ற ஒரு தன்மை அல்லது நடந்ததனை நியாயப்படுத்துகிற அதாவது விதியின் விளையாட்டு என்று கூறக்கூடி நிலைப்பாடு. அல்லது எதிர்வினைகளை உருவாக்கி தங்களுக்கு மாற்றுவழிகளை தேடக் கூடியதொரு நிலைப்பாடு. மேலும் தனது இயலாமையை மறைப்பதற்காக இயலுமானது ஒன்றின்மேல் தன்னுடைய அந்தக் கோபத்தை விலக்கிச் செலுத்துகின்ற ஒரு உளவியல் ரீதியான இடமாறிய செயற் பாடு என்று கூறுவார்கள். எங்கள் மக்களிடத்தில் இத்தகைய பல வித அழுத்தங்களை உரு வாக்குவதற்காகத்தான் இராணுவக் கட்டுப்பாட்டுபகுதிகளில் மிக மோசமான மனித அவலம் நிகழ்கிறது. அது எவ்வளவு பெரிய துன்பத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்று எங்களால் உணரக்கூடியதாகவுள்ளது. இதற்கு மருந்து ஏதும் இல்லை. மனத்திடமும் மன உரமும் நல்லோர் சொற்களும் தான் சரியான மாற்றாக இருக்க முடியும். நாங்கள் அந்நியர்கள் ,ஆய்வாளர்களின் கருத்துக்குச் செல்ல வேண்டியது இல்லை. எங்களுடைய தளபதிகள் களத்தில் நின்றவர்கள். இளைய தளபதிகளுடைய அற்புதமான கருத்துக்கள் எங்கள் மக்களுக்கு ஒரு வகையில் மன ஆறுதலையும் தேறுதலையும் தரும். அண்மையில் கள முனைக்குச் சென்ற மக்களிடத்தில் எமது இளைய தளபதி லெப். கேணல் லோறன்ஸ் ஆற்றிய உரையின் ஒரு சிறுபகுதி நாங்கள் உயிராக நேசிக்கக் கூடிய பாசத்துக்குரிய அம்மாமாரே அப்பாமாரே சகோதரர்களே இந்த கள முனையில் உங்களைக்கண்ட அளவற்ற மகிழ்வோடு என் வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன் . இப்போது நேரம் பகல் 11.30 மணிதான். இந்தக் கடற்கரை மணல் வெளியில் பரட்டைத் தட்டுகளின் மத்தியில் வெய்யில் எப்படிகொதித்துக் கொண்டிருகிறது என்பதை நீங்கள் கண்டு கொண்டிருக்கிறீர்கள். குறிப்பாக நீங்கள் இங்கு வந்து சேருவதற்காக சில கிலோ மீற்றர் நடந்தீர்களே.... அப்போது நிச்சயமாக எமது வீரர்கள் படும் துன்பங்கள் உங்கள் கண்களுக்கு தெரிந்திருக்கும். எனது தொப்பியைப் பாருங்கள் இதில் பூத்துக் கிடக்கும் உப்பைப் பாருங்கள். ஒவ்வொரு நாளும் எமது வீரர்கள் இந்தக்களத்தில் சிந்தும் வியர்வைக்கு இது ஓர் சிறு எடுத்துக்காட்டுத்தான். ஏனெனில் இந்த நாளில் இன்னமும் 12மணித்தியாலம் இருக்கிறது. நான் உங்களுக்கு இவற்றைக்கூறும் போது இந்தச்சூழலில் உங்களுக்கு எங்கள் மீது இரக்கம் வரக்கூடும். ஆனால் நாம் அதை உங்களிடம் எதிர்பார்க்க வில்லை. ஏனெனில் வாழ்வதற்காக எல்லோரும் உழைக்கத் தான் வேண்டும். அதுபோல் அடிமையாகப் பிறந்தவன் அந்த நிலையை மாற்றுவது என்றால் போராட்டக்களத்தில் தன்னை வருத்தித்தான் ஆகவேண்டும் என்றார் லோறன்ஸ்.

### வதைகளுக்கு அப்பால் ஒரு வாழ்வை அமைக்க வேண்டும்

அடிமையாகப் பிறந்த மக்கள் எங்கோ ஓர் இடத்தில் வதையை அனுபவிக்கத்தான் வேண்டும். களத்திலே போராளி அனுபவிக்கிற வதை தளத்திலே மக்கள் அனுபவிக்கிற வதை இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள நம் மக்கள் அனுபவிக்கிற வதை என்பவற்றை எண்ணிப் பார்த்து இந்த வதைகளுக்கு ஒரு அப்பால் வாழ்வை அமைக்க வேண்டும். அண்மையிலே வீரச் சாவடைந்த மிக உயரிய ஒரு உச்ச வீரன் மாவீ ரன் லெப். கேணல் வீரமணி என்று எங்களுடைய லெப். கேணல் பால்ராஜ் வர்ணித்திருந்தார். மாவீ ரன் லெப் .கேணல் வீர மணி ஆற் றிய இறுதி உரை ஒன்றின் மிகச் சிறுபகுதியின் பாரிய விடயம் ஒன்று இருப்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். கிளி நொச்சியால் வரும் போது எனக்குள்ளே நான் நினைப்பேன் கிளிநொச்சியை மீட்பதற்காக ஒவ்வொரு பற்றைக்குள்ளும் ஒழுங்கைக்குள்ளும் எத்தனை நாள் தண்ணீர் கூடக் குடிக்காமல் வேவுபார்ப்பதற்காக எதிரிகளுக்குள்ளே அலைந்து திரிந்திருப்போம். நூற்றுக்கணக்கான போராளிகளின் உயிர்களைக்கொடுத்துத்தான் அதை மீட்டோம். அதேபோல் நீங்களும் (மக்களும்) கிளிநொச்சியில் இருந்து எங்கெங்கோ எல்லாம் இடம் பெயர்ந்து தண்ணீருக்கும் உணவுக்கும் துன்பப்பட்டீர்கள். நாங்கள் துன்பப்பட்டது போலவே நீங்களும் துன்பப் பட்டீர்கள். ஆனால் நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரே இலக்குடன் இணைந்து பாடுபட்டிருந்தால் அவ்வளவு துன்பப்பட்டிருக்க தேவை யில்லை.

கிளிநொச்சியை உடனே மீட்டிருக்கலாம். அதற்கு இரண்டு வருடங்கள் நாங்கள் காத்திருக்க வேண்டியதாக இருந்தது என்று அவர் கூறியிருந்தார். வதை படவேண்டிய அவசியம் இருக்கிறது என்று ஒரு செய்தியும் வதைக்கு அப்பால் வதையை இலக்கிற்காக திசை மாற்றும் போது நிச்சயமாக அது ஒட்டுமொத்த மான பலனாக விடுதலையாக மாறும். அவ்வாறில்லாமல் தனித்தனியாக வதை பட்டுக்கொண்டிருந்தல் அந்த வதையானது அவலத்தைத் தந்து இறுதியில் மனச்சோர் வைத்தரும்.

### அதிர்ச்சி நோய் வராதிருக்க

நமது துன்பங்கள் யாவும் விடுதலைக்காக நமது விடுதலைக்காக நாம் துன்பப்படுகின்றோம் என்று செயலாற்றும் போது நமக்கு அதிர்ச்சி நோய்வராது. தமிழீழ மக்கள் அனைவருமே படையினருக்கு அதிர்ச்சிநோயை விளைவிக்கும் போது நிச்சயமாக அவர்கள் மடிவார்கள். அண்மைக்காலமாக எமது விடுதலைப் போராட்டம் உலகத்திற்கு கொடுத்திருக்கக்கூடிய அதிர்ச்சிக்கு மேலான அதிர்ச்சியானது ஒரு புதிய தரை நிலை மாற்றத்திற்குட்பட்டிருக்கிறது என்பதைத் தான் கூறுகிறது. இதுதான் ஒஸ்லோ பேச்சுக்களின் வெளிப்பாடு. அதன் விளைவாகத்தான் எரிக் சொல்ஹெய்ம் இரு தரப்பினரது தலைமைப் பீடத்திற்கும் 5 வினாக்களை அனுப்பியுள்ளார். அந்த வினாக்களுக்கு சரியான விடை கிடைக்காவிட்டால் நாங்கள் நடுவர் நிலையையே மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்று சொல்லக்கூடிய மிக மோசமான நிலைக்கு வந்துவிட்டோம் என்று எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். ஆகவே அதிர்ச்சி நோய் எமக்கு அல்ல என்றார் . (சு)

# அமெ.இராணுவம்-தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் மோதல்

## 14 தீவிரவாதிகள் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்துக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் 14 தீவிரவாதிகள் பலியானார்கள். அமெரிக்க இராணுவத் தரப்பில் 2பேர் இறந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தெற்கு மாநிலத்தில், பாதுகாப்பு பொறுப்பை அமெரிக்க இராணுவத்திடம் இருந்து நேட்டோ நாடுகளின் இராணுவம் ஏற்கவிருக்கிறது. இந்த நிலையில் அங்கு தீவிரவாதிகள், அமெரிக்க இராணுவத்துக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

ஹெல்மாண்டு மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர்கொல்லப்பட்டார். இதைத்தொடர்ந்து தீவிரவாதிகளை வேட்டையாடும் பணி அந்தப் பகுதியில் முடுக்கி விடப்பட்டது.

அப்போது இருதரப்புக்கம் இடையே துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இராணுவத்துக்கு ஆதரவாக போர் விமானங்களும் இராணுவ ஹெலிகப்டர்களும் தலிபான் முகாம்கள் மீது குண்டு வீசித்தாக்கின.

இந்தத் தாக்குதலில் 12 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்ட னர்.விமானத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் யாரும் கொல்லப்பட்டார்களா என்பது பற்றி இராணுவம் விசாரித்து வருகிறது.

இதேவேளை ஜாபுல் மாநிலத்தில் அமெரிக்க வாகனம் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 அமெரிக்க வீரர்கள் காயம் அடைந்தனர். இதைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 தீவிரவாதிகள் பலியானார்கள். (து)

WORLD NEWS உலக தரிசனம்




ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு திடீர் பயணம் மேற்கொண்ட அமெரிக்க அதிபர் புஷ் அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்ற ஈராக் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றார். உடன் பிரதமர் நூரி அல்-மாலிகி.

# ஈரானுக்கு மிரட்டல் அறிக்கை ரஷ்யா, சீனா நிராகரிப்பு

(வியன்னா)

அணுசக்தி திட்டங்களைக் கைவிடும்படி ஈரானுக்கு மிரட்டல் விடுவிக்கும் கூட்டறிக்கையில் கையெழுத்திட ரஷ்யாவும் சீனாவும் மறுத்துவிட்டன. ஈரான் அணு ஆதங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா கூறிவருகிறது. ஈரானை பயங்கரவாத நாடு என சித்தரிக்கஅதுமுயற்சி செய்வதாக பல் வேறு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. இந் நிலையில் யுரேனியம் செறிவூட்டலை நிறுத் தும்படி ஈரானுக்கு எச்சரிக்கை விடுக்கும் கூட்டறிக்கையை வெளியிட அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் விரும்பின.

ஆனால் அத்தகைய அறிக்கையில் கையெழுத்திட ரஷ்யாவும் சீனாவும் மறுத்துவிட்டன. இதையடுத்து ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் மட்டும் இணைந்து அறிக்கை வெளியிட முடிவு செய் துள்ள தாக ஐரோப்பிய யூனியனின் மூத்த அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

அதுபோல ஈரான் தொடர்பாக மற்ற மூன்று நாடுகளும் தங்கள் விருப்பப்படி அறிக்கை வெளியிடலாம் எனவும் அவர் கூறினார். சமீபத்தில் வியன்னாவில் இந்த ஆறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.

யுரேனியம் செறிவூட்டலை நிறுத்தினால் வர்த்தகம், தொழில் நுட்பத்துறைகளில் சலுகைகள் வழங்கப்படும் என அப்போது அறிவிக்கப்பட்டது. சலுகைகள் அடங்கியபட்டியலை ஈரான் பரிசீலித்து வருவதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சகம் கூறியிருக்கிறது. இதனிடையே ஈரானை நிர்ப்பந்திக்கும் வகையில் மிரட்டல் அறிக்கை வெளியிடும் முயற்சிக்கு ரஷ்யாவும் சீனாவும் மறுத்துள்ளன. (து)

# ஈராக்கில் வன்முறைக்கு முடிவுகட்ட முடியாது

## அமெரிக்க அதிபர் புஷ்

ஈராக்கில் வன்முறைக்கு முழுமையாக முடிவு கட்ட இயலாது என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார். ஈராக் குக்கு கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் இரகசியப் பயணம் மேற்கொண்ட அவர் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிச் செல்கையில், அமெரிக்கவிமானப்படை விமானத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில்,

2009இல் பதவிக் காலம் முடிந்து அமெரிக்க அதிபர் பொறுப்பில் இருந்து நான் விலகுவதற்குள் ஈராக்கில் பாதுகாப்பு குறிப்பிடத்தக்க வகையில் மேம்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். வன்முறையே இல்லை என்ற நிலைதான் சிறந்த அளவுகோலாக இருக்கும் எனில் த அது எட்ட முடியாத அளவுகோலாகவே இருக்கும்.

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசு என்பது அளவுகோலாக இருக்கும் எனில் அந்த அளவுகோலை ஈராக் அரசு நிச்சயம் பூர்த்தி செய்யும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் ஈராக்கில் இயல்பு நிலை திரும்புவதற்கு அரசு விவேகமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வன்முறை என்ற பேச்சுக்கே இட மில்லை என்பதுதான் ஈராக்கில் வெற்றிக்கு அர்த்தம் என்று கருதுவது, வெற்றி தோல்வியை மதிப்பிடுவதற்குசரியானவழியல்ல. மக்களைக் கொல்ல விரும்பும் தற்கொலைப் படையினர், கார் குண்டு தாக்குதல்காரர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளை அரசுமேற்கொண்டு வருகிறது என அரசு நிர்வாகம் குறித்து மக்கள் வசதியாக உணரும் வகையில் ஓர் ஒழுங்கு உணர்வை ஏற்படுத்துவதுதான் ஈராக்கில் குறிக்கோளாக இருக்கமுடியும். வன் முறையே முற்றிலும் இருக்காது என ஈராக் அரசு உத்தரவாதம் அளிக்கமுடியும் என நான் நினைக்கவில்லை என்றார். (து)

# பாக்.இல் இந்துக் கோயில் இடிப்பு அத்வானி கண்டனம் தெரிவிப்பு

(புதுடில்லி)

வணிக வளாகம் கட்டுவதற்காக லாகூரில் உள்ள இந்துக் கோயிலான கிருஷ்ண மந்திர் இடிக்கப்பட்டதற்கு மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அறிக்கை யொன்றையும் விடுத்துள்ளார். இக் கோயில் இடிக்கப்பட்ட சம்பவத்தை அறிந்து இந்தியாவில் லண்சக்கணக்கான இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பாகிஸ்தானில் புராதன இந்துக் கோயிலாக விளங்கிய இக் கோயிலை சீரமைக்கும் திட்டத்தை தொடங்கி வைக்குமாறு தன்னை பாகிஸ்தான் அரசு கேட்டுக்கொண்டதையும் நினைவு கூர்ந்துள்ளார். (து)

# சமர்மதி ஆச்சிரமத்தை இடிக்க உயர் நீதிமன்றம் தடை

இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தி வாழ்ந்த சமர்மதி ஆசசிரமத்தை இடிப்பதற்கு உயர் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் சமர்மதி நதிக்கரையில் மகாத்மா காந்தி வாழ்ந்த இந்த சமர்மதி ஆச்சிரமம் அமைந்துள்ளது. 1917ஆம் ஆண்டுமுதல் 1930ஆம் ஆண்டுவரை மகாத்மா காந்தி இந்த ஆச்சிரமத்தில் தங்கியிருந்தார். சரித்திரப் பிரசித்திபெற்ற உப்புச் சத்தியாக்கிரக தண்டி யாத்திரை இங்கிருந்துதான் ஆரம்பமானது.

காந்திஜி தங்கியிருந்ததால் இந்த சமர்மதி ஆச்சிரமம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகப் போற்றப்படுகிறது. இந் நிலையில் நகர அமைப்புத் திட்டத்தின் கீழ் சமர்மதி ஆச்சிரமத்தின் ஒரு பகுதியை இடிக்க அகமதாபாத் நகரசபை முடிவு செய்தது. இதை எதிர்த்து சமர்மதி ஆச்சிரம நிர்வாகிகள் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். இவ் வழக்கு 20 ஆண்டுகளாக நடந்தது.

முடிவில் ஆச்சிரமத்தின் ஒரு பகுதியை இடிக்க குஜராத் மேல் நீதிமன்றம் உத்தர விட்டது. இதை எதிர்த்து ஆச்சிரம நிர்வாகிகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இவ் வழக்கை விசாரித்த நீதி பதிகள் மகாத்மா காந்தி வாழ்ந்த சமர்மதி ஆச்சிரமத்தை இடிக்க இடைக்காலத்தடை விதித்தனர்.


மறு உத்தரவு வரும்வரை சமர்மதி ஆச்சிரமத்தை இடிக்கக்கூடாது என்றும் முன் பிருந்த நிலையே அங்கு நீடிக்க வேண்டு மென்றும் நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர். (து)

# பொது இடங்களில் புகை பிடிக்க தடை

நேபாளம்)

நேபாள நாட்டில் பொது இடங்களில் புகைபிடிக்கவும் பத்திரிகைகளில் சிகரெட் விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் தடை விதிக்கும்படி அந்த நாட்டு சுப்ரீம் கோர்ட் உத்திரவிட்டுள்ளது.

தடை விதிக்க வகைசெய்யும் புகையிலை கட்டுப்பாட்டுச் சட்டம் தயாராகிவருவதாக சுகாதார அமைச்சரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நேபாளத்தில் ஆண்டு தோறும் 15 ஆயிரம் பேர் புகைப்பிடிப்பதால் பலியாகி வருகிறார்கள். இதனால் புகை பிடிக்கத் தடை விதிக்கும்படிசுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கைத் தொடர்ந்து இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (து)



சிறுபிள்ளைகள் ஆர்வமாக புத்தகம் படிக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்காவில் கான்சாஸ் மாநிலத்தில் ஓவர்லேண்ட் பார்க் என்ற இடத்தில் உள்ள ஒரு நூலகத்தில் பழக்கப்படுத்திய நாயை பிள்ளையுடன் அனுப்புகிறார்கள்.

மனிதர்கள் இன்னும் பண்பாடு அடையவில்லை. ஓநாய்க் கூட்டங்களின் உணர்ச்சி இன்னும் அவர்களிடம் குடிகொண்டிருக்கின்றது.

-ப்ராய்டு

வலம்புரி

# மனித உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் முன்வாருங்கள்

உலகில் ஒப்பற்ற பெறுமானம் உடைய மனித உயிர்களைப் பாதுகாப்பதில் இலங்கை பின்னிற்கின்றது.

ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் மனித உயிரைப் பாதுகாப்பதில் அதீத கவனம் செலுத்த வேண்டும். இனம், மதம், மொழி என்பவற்றை கடந்த 'மனிதம்' என்ற அடிப்படையிலான சிந்தனை அவசியமாகும்.

உயிரிழப்பு என்பது எந்தப் பக்கத்தில் நடந்தாலும் அது பேரிழப்பு என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

ஒருவர் உயிரிழந்து விட்டால் அவரைச்சார்ந்தவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு பல ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கக்கூடியது. எனவே இத்தகைய உயிரிழப்புக்களைத் தடுக்க வேண்டுமாயின் நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ வேண்டும்.

நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டுமாயின் அந்த நாட்டில் அனைத்து மக்களும் சம உரிமையோடு வாழ வேண்டும்.

இனத்தால் - மதத்தால் - மொழியால் மக்கள் பேதப்படுத்தப்படுவார்களாயின் அந்த நாட்டில் நிம்மதியும் வாழும் உரிமையும் இல்லாமல் போகும்.

இந்நிலைமையே இலங்கையில் தற்போது காணப்படுகின்றது. தமிழ் மக்கள் சிறுபான்மையினம் என்ற வகைப்படுத்தலில் கொல்லப்பட்டார்கள். அவர்களின் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்திப் பணி என்ற அனைத்திலும் அவர்கள் ஓரங்கட்டப்பட்டனர்.

பெரும்பான்மை என்ற தடிப்பாலும் ஆளும் இனம் நாமே என்ற அதிகாரத் தோரணையிலும் அன்று செய்த அட்டூழியங்களின் விளைவு,

இன்று ஒட்டுமொத்தமாக இலங்கையில் யாருமே நிம்மதியாக வாழ முடியாது என்பதாகிவிட்டது.

சிங்கள மொழியும் பௌத்த மதமும் என்ற சிந்தனை வாதம் முற்றி முறுகியதான் பயன் இப்போது ஒவ்வொரு வீட்டிலும் அழுகுரல் ஓசையை ஏற்படுத்தியுள்ளது.

பேரினவாதம் கக்கிய ஜெ.ஆர்.ஜயவர்த்தன இன்று இல்லை. யாழ்.பொது நூலகத்தை எரியூட்ட நெருப்பெடுத்துக் கொடுத்த காமினி திஸநாயக்கா மாண்டு போனார்.

சகட விமானத்தின் மூலம் குண்டு போட்டு அப்பாவி மனிதர்களை அழித்த - செல்வச்சந்நிதி தேரை எரியூட்டிய லலித் அத்துலத்முதலி அக்கினியில் சங்கமமாகிப் போனார்.

ஆனால் அவர்கள் விதைத்த பேரினவாதச் சிந்தனைகள் தமிழ் மக்கள் மீதான அழிப்பு நடவடிக்கைகள் யாவும் ஒன்று திரண்டு முழு இலங்கையிலுமே கொலை , குண்டு வெடிப்பு நிம்மதியற்ற வாழ்க்கை என்பதை வாரித் தருகிறது.

இனிமேலாவது சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்றால் ஜே.வி.பி., ஹெல உறுமய விடவா போகின்றன?

என்ன செய்வது இறைவா! உன்னையன்றி இலங்கையில் மனித உயிர்களைப் பாதுகாக்க யார் உள்ளர் என்பதே இன்றைய வாய்மொழியாகும்.

# மங்களவுக்கு அளித்த வரவேற்பால் தமிழர்கள் கவலையடைவார்களாம்

## எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு நோர்வேயில் வழமைக்கு மாறான உயர் நிலை அரசியல் வரவேற்பு அளிக்கப்படுவதால் தமிழர்கள் கவலையடையக்கூடும் என்று நோர்வே யின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக என்ஆர்கே தொலைக்காட்சியின் இணையச்செய்திக்கு எரிக் சொல்ஹெய்ம் அளித்த நேர் காணலில், ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சருக்கு வழங்கப்படுகின்ற வரவேற்பிற்கு அதி கமான வரவேற்பு மங்கள சமரவீரவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதான உணர்வு தமிழ் மக்களுக்கு ஏற்படும் வாய்ப்பு உண்டு என்றார்.

இதேவேளை, நோர்வே வெளிவிவகார அமைச்சரை மங்கள சமரவீர சந்தித்தபோது தமிழ் மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியமை தெரிந்ததே. ஒரு வார கால நோர்வே பயணம் மேற்கொண்டுள்ள மங்கள சமரவீரவுக்கு நோர்வேயின் உயர்மட்ட அரசியல் வரவேற்பு அளிக்கப்பட்டு வருகின்றது.

நோர்வே மன்னர் ,தலைமை அமைச்சர் , நாடாளுமன்ற சபாநாயகர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடன் இதுவரை சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன.

மங்களவுக்கு நோர்வே உயர்நிலை வரவேற்பளித்து வருகின்றமை நோர்வேத் தமிழர்களை கவலையடையச் செய்துள்ளது என்று நோர்வேயின் ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. என்ஆர்கே தொலைக் காட்சியின் இணையத் தளம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில், மங்களவிற்கான நோர்வே மன்னரின் வரவேற்பு தொடர்பாக நோர்வேயில் இருந்து பயணமாகும் போது தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்த அதிருப்தி பற்றிய செய்தியை சுட்டிக்காட்டியுள்ளது. (க)

# வங்காலை படுகொலை சம்பவத்தை கண்டித்து மன்னாரில் இன்றுபேரணி

(மன்னார்)

வங்காலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மன்னார் பிரஜைகள் குழு இன்று வெள்ளிக்கிழமை சமாதானப் பேரணியொன்றை மன்னார் நகரப் பகுதியில் நடத்தவுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இச் சமாதானப் பேரணியில் மன்னார் ஆயர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ,சர்வமதத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் வர்த்தக சங்கத்தினர், மீனவர் சங்கங்கள் , கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

வங்காலையில் இடம்பெற்ற கொடூரச் சம்பவங்கள் உட்பட அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வன்முறைகளைக் கண்டித்தும் சமாதான செயன் முறைகளை திறந்த மனதுடன் உடனடியாக ஆரம்பிக்குமாறு கோரியுமே இச் சமாதானப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை எமிலியாஸ் பிள்ளை தெரிவித்தார்.

இன்று காலை 9 மணிக்கு புனித மரியாள் தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இப்பேரணி வைத்தியசாலை வீதியினூடாக மன்னார் நகரத்தை அடைந்து கச்சேரியில் நிறைவடையவுள்ளது.

பேரணியின் முடிவில் ஜனாதிபதி மற்றும் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கான மகஜர்கள் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன. (க-7)

# வீதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி குறித்த மதிப்பீடுகள் ஆரம்பம்!

(கொழும்பு)

பிரதேச வீதிகளை அபிவிருத்தி செய்ய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்ட விதம் குறித்து மதிப்பீடு செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார அமைச்சர் ரி.பி. எக்கநாயக்க தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 50 இலட்சம் ரூபா நிதி வருடாந்தம் வழங்கப்படுகின்றது. அத்துடன் அவர்களுக்கு பிரதேச வீதி அபிவிருத்திக்காக 25 இலட்சம் ரூபா வீதி அபிவிருத்தி அதிகார அமைச்சின் ஊடாக வழங் கப்படுகின்றது.

கட்சி பேதமின்றி சபை உறுப்பினர்களுக்கும் பிரதேச வீதி அபிவிருத்திக்காக 25 இலட் சம் ரூபா பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

# 300 படையினருக்கு பலாலியில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பலாலி படைத்தளத்தில் சிறப்புபடையணிகளுக்கு "பரசூட் தரையிறக்கப்பயிற்சிகள்" வழங்கப்படுகின்ற தாகத் தெரிவிக் கப்படுகின்றது.

கனரக உலங்கு வானூர்திகள் மூலம் வழங்கப்படும் பயிற்சிகளை 300 படையினர் பெற்றுவருகின்றனர் என்றும் இப்பயிற்சியில் திடீரென கடலில் தரையிறங்குதல் , காட்டுப் புறங்களில் தரையிறங்குதல், அதிரடித்தாக்குதலுக்கான தரையிறக்கம் போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றதாகவும் கூறப்படுகிறது. (க)

# உறவினர்கள் உடன் தொடர்புகொள்க!

(யாழ்ப்பாணம்)

வீதியில் விபத்துக்குள்ளான நிலையில் பெயர் , முகவரி, வயது எதுவும் தெரியாத நிலையில் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சுய நினைவு அற்ற நிலையில் கடந்த 12 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் கிருஷ்ணசாமி பாலகிருஷ் ணன் , கெற்பலி எனும் ஓர் அழிந்த நிலையிலுள்ள அடையாள அட்டையும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனவே இவரது உறவினர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

# புதிய நேர அட்டவணைப்படி யாழ். மாவட்ட பாடசாலைகள் 8 மணிக்கே ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

புதிய நிர்வாக நேர அட்டவணையின் பிரகாரம் யாழ். மாவட்ட பாடசாலைகள் காலை 8.00மணிக்கே ஆரம்பிக்கப்பட வுள்ளதாக யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசினால் வெளியிடப்பட்ட புதிய நிர்வாக நேர அட்டவணையின் படி யாழ். மாவட்ட பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாக வேண்டும்.

ஆனால் யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் மாணவர்கள் குறித்த 7.30 மணிக்கு பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

சில பிரதேசங்களில் காலை 8 மணியிலிருந்தே போக்குவரத்து சேவைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாக தீவுப்பகுதிகள் மற்றும் தென்மராட்சிப்பகுதிகளில் போக்குவரத்துச் சேவைகள் உரிய நேரத்தில் இடம்பெறுவதில்லை என தெரிவிக் கப்படுகிறது.

இந்தகைய நிலைமைகளை கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட பாடசாலைகள் வழமையான நேரம் 8.00மணிக்கே ஆரம்பிக்கப்படும் என கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (க-7)

# டென்மார்க் வாழ் தமிழ் மக்கள்— மேற்கொள்ளும் கவனார்ப்பு வாரம்

இலங்கை அரசினால் தமிழ் மக்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆட்கடத்தல்கள் , கற்பழிப்புக்கள், கொலைகள் போன்ற பல மனித உரிமை மீறல்களை டெனிஷ் மக்களிற்கு எடுத்துக்காட்டும் நோக்குடனும் ஐரோப்பிய ஒன்றியம் தமிழ் மக்களின் பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்தது நீதியற்றது. தமிழீழ விடுதலை புலிகள் தமிழீழ மக்களை அழிவில் இருந்து பாதுகாக்கும் விடுதலை அமைப்பாகும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் கோட் பாடோ நடவடிக்கைகளோ வேற்று நாட்டவர்களின் இறைமைக்கு அச்சுறுத்தலான ஒன்றல்ல போன்ற விடயங்களை முன்வைத்தும் கறுப்பு பட்டிகளை அணிந்து டெனிஷ் மக்க ளின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் தமிழர் கள் வாழும் அனைத்து நகரங்களிலும் போராட்டம் நடைபெற்றுவருகிறது.

பாடசாலைகள் , பல்கலைக்கழகங்கள், வியாபாரஸ்தாபனங்கள் , வழிபாட்டுஸ்தலங்கள், வேலைத்தளங்கள் மற்றும் தமிழ்ச் சங்கங்கள் அனைத்து இடங்களிலும் கறுப்புப் பட்டி அணிந்து மக்கள் எமது நிலைப் பாட்டை டெனிஷ் மக்களிற்கு எடுத்துச்சொல்லி வருகின்றனர்.

தமிழ் இளையோர் அமைப்பும் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியமும் உள்ளூர் ஊடக வியலாளர்களை தொடர்பு கொண்டு கறுப்புப்பட்டி வாரத்தின் நோக்கத்தை விளக்கியுள்ளனர். (க)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஒருவன் அவனுக்காக மட்டும் பிரார்த்தனை செய்வது சரியல்ல. இந்த உலகெல்லாம் வாழும் படி பிரார்த்னை செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் அதில் அவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி உள்ளன. பிரார்த்தனை செய்ய வேண்டுமானால் இப்படித் தான் செய்யவேண்டும்.

# புலிகளின் நிர்வாகப் பகுதிகள் மீது பரவலாக கிபிர்த் தாக்குதல்கள்

## பொதுமக்கள் பலர் படுகாயம்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்புப் பகுதியில் நேற்று கிபிர் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட கிபிர் தாக்குதலில் பல பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 11.45 மணியளவில் முல்லைத்தீவை வட்டமிட்ட இரு கிபிர் விமானங்கள் செல்வபுரம், வட்டுவாகல் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள்மீது தாக்குதலை நடத்தியுள்ளன.

பின்னர் 11.55 மணியளவில் வந்த கிபிர் அப் பகுதிகளில் குண்டு வீசியுள்ளது. இதில் 6பொதுமக்கள் படுகாயமடைந்தனர். மக்கள் குடியிருப்புக்களும் தேசமடைந்ததுடன் கால் நடைகளும் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவுப் பகுதிகளில் மாலை 6.25 மணி முதல் 6.35 வரை நான்கு தடவை குண்டுகளை வீசியுள்ளன.

அதன் பின்னர் மீண்டும் 6.45 மணிக்கு இரு கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசிச் சென்றன. அதைத் தொடர்ந்து 6.55 மணிக்கு இரு கிபிர் விமானங்கள் மீளவும் குண்டுகளை வீசின.

வானில் மிக உயரத்தில் பறந்தவாறு ஏவுகணை எதிர்ப்பு சாதனத்தை இயக்கியபடியே விமானங்கள் குண்டுகளை வீசின என அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோல மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான தரவை மற்றும் புலிபாய்ந்தகல் பகுதிகளில் மாலை 3.15 மணியளவில் கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதலை நடத்தியதாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா மோகன் கூறியுள்ளார்.

மேலும் வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளை நோக்கி மோட்டார் எறிகணை மூலம் காலை 8 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இத் தாக்குதலில் 300 பேர் தங்கியிருந்த ஆழிப் பேரலை அகதி முகாம் தப்பியது. இதனையடுத்து அங்கிருந்து ஆழிப் பேரலையால் இடம்பெயர்ந்த அகதிகள் வெளியேறியுள்ளனர்.

(ச-5,9)

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

### ஈகுவாடர் வெற்றி

(ஹம்பார்க்)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று ‘ஏ’ பிரிவில் ஈகுவாடர் – கோஸ்டாரிக்கா ஆகிய அணிகள் மோதின.

இதில் ஈகுவாடர் மூன்று கோல்கள் அடித்து கோஸ்டாரிக்காவை வென்றது. கோஸ்டாரிக்கா அணி கோல் எதுவும் போடவில்லை.

ஈகுவாடர் அணி மூன்று புள்ளிகளை பெற்றுக் கொண்டது.

### இங்கிலாந்து வெற்றி

(நூர்ம்பார்க்)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ‘பி’ பிரிவில் இங்கிலாந்து – ட்ரினிடாட் ஆகிய அணிகள் மோதின.

விறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் முதற் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமல் சம நிலையில் இருந்தன.

இங்கிலாந்து அணி வீரர்கள் இறுதி நேரத்தில் இரண்டு கோல்களைப் போட்டு டிரினிடாட்டை வெற்றி கொண்டனர்.

டிரினிடாட் அணி கோல் எதுவும் அடிக்காமல் 0:2 என்ற கணக்கில் தோல்வியுற்றது. இவ் வெற்றியுடன் இங்கிலாந்து அணி லீக் போட்டியில் ஆறு புள்ளிகளைப் பெற்று இரண்டாவது சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளது.

(ச-5)

## கிளைமோர்த் தாக்குதல் முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிப்பு

### ஒரு இராணுவச் சிப்பாய் பலி

(கிளிநொச்சி)

வவுனியா வடக்கில் இராணுவத்தினரின் மற்றொரு கிளைமோர்த் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். இந்த முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினரின் கிளைமோர்த் தாக்குதல் முயற்சி, நேற்று முன்னாள் தமிழீழ தேசியத் துணைப்படை சிறப்பணியினரால் முறியடிக்கப்பட்டு இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

அப்போது இராணுவத்தினர் தமது உடைமைகளை விட்டுத் தப்பினர். கொல்லப்பட்ட சிப்பாய் விடுதலைப்புலிகளின் இராணுவச் சீருடையை அணிந்திருந்தார்.

இதையடுத்து ஊடுருவியுள்ளோரைத் தேடும் நடவடிக்கையை விடுதலைப்புலிகள் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது வவுனியாவின் வடக்கில் கிளைமோர்த் தாக்குதல் நடத்த முயற்சித்த இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்தவரும் விடுதலைப்புலிகளின் இராணுவச் சீருடை அணிந்திருந்தார். அவரிடம் துப்பாக்கிக் குண்டுகள் இருந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பயணிகள் பஸ் கிளைமோரில்...

நேற்றுக் காலை யங்காவெவ எனும் இடத்திலிருந்து ஹெப்பிட்டிக்கொல்லாவ நோக்கி சுமார் 150 பயணிகளுடன் சென்ற இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ் காலை 7.15 மணியளவில் விகாரை கல்விவாவெல எனும் இடத்தில் கிளைமோரில் சிக்கியது.

இத் தாக்குதலின்போது தாய்–சேய் நலச் சிகிச்சைக் கிளினிக்குக்காக சென்ற பலர் இந்த பஸ்ஸில் இருந்ததாகத் தெரியவருகின்றது.

இத் தாக்குதலில் 64 பேர் உயிரிழந்தனர்.84 பேர் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 14 சிறுவர்கள் ,ஒரு பௌத்தபிக்கு மற்றும் பெண்கள் உட்பட 64 பேர் உயிரிழந்ததாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.86 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவரும் சிங்கள மக்கள் என தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்தவர்கள் ஹெப்பிட்டிக்கொல்லாவ, அநுராதபுரம் மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் மூவரின்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாரிய சத்தத்துடன் இக் குண்டு வெடித்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கான பஸ் தூக்கி வீசப்பட்டதாக பஸ்ஸில் பயணித்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சம்பவ இடத்தில் குவிக்கப்பட்ட பெருமளவான இராணுவத்தினரும் பொலிஸாரும் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர்.

*ஜனாதிபதி நேரில் விஜயம்*

இது இவ்வாறிருக்க கிளைமோர்த் தாக்குதல் நடைபெற்ற இடத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் மரணமானவர்களின் குடும்பத்தினருக்கு உடனடித் தேவைக்காக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்ட ஜனாதிபதி இறந்தவர்களின் குடும்பங்களுடன் உரையாடினார்.

இதேவேளை தாக்குதல் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

(ச-5,9)




## மூதூரை நோக்கி எறிகணைத் தாக்குதல்

திருகோணமலை மூதூரில் விடுதலைப் புலிகளின் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் கண்மூடித்தனமான எறிகணை வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மூதூரில் உள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்றுக் காலை 10.30 மணிமுதல் தொடராக தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் தாக்குதல் இடம்பெறுவதால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை எனக் கூறப்படுகின்றது.

மூதூர் கிழக்கு சம்பூர் பகுதிகளில் இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதல் குறித்து.போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

மூதூர் பகுதியில் பல்குழல் எறிகணைத் தாக்குதலை இராணுவத்தினர் நடத்தினர். இத் தாக்குதலின்போது கண்காணிப்புக்குழுவினரும் அப்பகுதியில் இருந்துள்ளனர் என தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ள எழிலன் பொதுமக்கள் மீதான தாக்குதலை அரசாங்கம் உடனே நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று வலியுறுத்தியுள்ளார். (ச-5,9)

## கனகராயன்குளத்தில் கிளைமோர்த் தாக்குதல்

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் நேற்று கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராணுவ ஆழ ஊடுருவும்அணியினராலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மக்களை ஏற்றிக் கொண்டு சென்றஎல்வ்வகைவாகனத்தை இலக்குவைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.எனினும் வாகனம் வேகமாகச் சென்றதால் தாக்குதலிலிருந்து தப்பியது. (ச-5)

## யாழில்...

கைக்குண்டுத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் உடனடியாக யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டபின் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது. (ச-5,15)

## ஹெப்பிட்டிக்...

மீது முழுப்பழியைச் சுமத்தும் நோக்குடன் நடத்தப்பட்டுள்ளது.

கிளைமோர்ச் சம்பவத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் நிர்வாக முல்லைத் தீவுப்பகுதியில் விமானக் குண்டு வீச்சை விமானப்படையினர் நடத்தியுள்ளனர்.

கிளைமோர்த்தாக்குதலுக்கான பதில் நடவடிக்கையென்று அரசாங்கம் இதனை நியாயப்படுத்துகின்றது. சர்வதேச ஊடகமும் இந்தப் பொய்யான பரப்புரையில் வீழ்வது எதிர் பாராத ஒன்றாகவுள்ளது.

சர்வதேச ஊடகங்கள் தங்களது உயரிய மதிப்பீடுகளை, செய்திகளை வெளியிடுவதில் கடைப்பிடிக்க வேண்டுமென அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அநுராதபுரம் ஹெப்பிட்டிக் கொல்லாவவில் இடம்பெற்ற தாக்குதலுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஹெப்பிட்டிக்கொல்லாவ பிரதேசத்தில் பொதுமக்கள்மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலை அரசாங்கம் மிகவன்மையாகக் கண்டிக்கிறது.

இது இராணுவத்தினரை இலக்குவைத்து நடாத்திய தாக்குதல் அல்ல; மாறாக அப்பாவிப்பொதுமக்களை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட தாக்குதலாகவே கருதமுடிகிறது என அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலியரம்புக்வெல தெரிவித்தார். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.